குடிவாழ்வு சிறப்பாக அமைவதற்கு நாட்டின் தலைவன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே அரசியல் கோட்பாடுகளை வள்ளுவர் வகுத்துள்ளார். ஆகவே அவர் குறிப்பிடுகின்ற கோட்பாடுகள் இன்றைய சனநாயகத் தலைவர்கட்கும் தக்கனவாகவே அமைந்துள்ளன. ஒரு நாட்டின் தலைவன் ஈகை, கல்வி, அறிவு, அஞ்சாமை, ஊக்கம் முதலிய பண்புகளைப்பெற்றவனாய் அமைதல் வேண்டும் என்கிறார். (குறள் 382, 383) மேலும் ஒரு நாட்டின் தலைவன் பொருளைப் பெருக்கித் திரட்டிக்காத்து ஏற்றவாறு திட்டமிட்டுச் செலவிடுவதிலும் வல்லுவனாய் இருத்தல் அவசிம் எனப்பரிந்துரைக்கிறார்.

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)

இக்கால நாட்டின் தலைவர்களை நாம் தொலைக்காட்சிப் பெட்டியிலோ அல்லது பத்திரிகைகளின் முகப்புக்களில் பிரசுரமாகும் புகைப்படங்களிலோ காணமுடியுமே ஒழிய நேரில் காண்பதென்பது முயற்கொம்பாகும். உடற் பாதுகாவலர் புடைசூழ பகிரங்கக் கூட்டங்களில் சிலவேளை தோன்றிமறைவதோடு சரி. ஆனால் வள்ளுவர் என்ன சொல்கிறார்? எவரும் எளிதில் காணத்தக்கவனாகவும், மக்களிடம் இன்சொல்லே பேசுபவனாகவும் அவனிருக்க வேண்டும் என்கிறார்.

"காட்சிக்கு எளியன் கடுஞ் சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம" (குறள் 386)

மக்களின் பேச்சுரிமையை மதித்து, அவர்கள் வெறுப்பான சொற்களைப் பேசினாலும் அவற்றைப் பொறுப்போனாக நாட்டின் தலைவன் இருக்கவேண்டும். ஆட்சித்த் தலைவனாக இருந்தாலும் தனியாட்சி நடத்தமுனைவதால் பழுதே விளையும். அறிவுள்ளோரை தம்மோடு இணைத்து ஆட்சி நடத்துதல் அத்தியாவசியமானது. மக்களை இடரின்றி வாழச் செய்வதற்காக அவர்களுக்கு தீமை இழைப்போரைத்தண்டிப்பது தலைவனுக்கு வடு அல்ல. அது அவனது கடமையேயாகும் என வலியுறுத்துகிறார் வள்ளுவர் பெருமான்.

"குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்
வடு அன்று வேந்தன் தொழில்" (குறள் 549)

ஆனால் குற்றவாளிகளைத்தண்டிப்பதற்கும் பதிலாக பொதுமக்களை எதுவுமறியாத பிரசைகளைத் தண்டிக்கத்தொடங்கினால் அத்தலைவன் கொலைகாரனை விடக்கொடியவன் என்பதையும் வள்ளுவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"கொலை மேற்கொண்டாரின் கொடிதே, அலை மேற்கொண்டு
அல்லவை செய்து ஒழுகும் வேந்து" (குறள் 551)

ஒரு நாட்டின் தலைவன் தன் பகைவரைக்காட்டிலும் வலிமையுடையோனாக இருக்கலாம். ஆனால் அவிடம் போதிய திறமை இல்லாவிடில் அப்பகைவருக்கு அஞ்சியே ஆகவேண்டுமல்லவா? அதனை ஒரு சிறந்த உதாரணம் மூலம் சிறப்பாகக் குறிப்பிட்டுக்காட்டுகிறார் வள்ளுவர்.

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம், புலி தாக்குறின" (குறள் 599)


பெரிய உடலினையும், கூரிய தந்தத்தையுமுடைய யானை புலிக்கு அஞ்சுவதைப்போல என அழகிய உவமை படைக்கிறார் பொய்யில் புலவர்.

உலகில் பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த அறிஞர்கள் ஓர் அரசியல் முறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆய்ந்து விளக்கியுள்ளனர். இங்கிலாந்தை சேர்ந்த தோமஸ் மூர் என்பவர் தனது "கனவுலகம்" எனும் நூலில் ஓர் அரசியல் முறையை வகுத்துக்காட்டுகிறார். கிரேக்கத்தில் வாழ்ந்த பிளேட்டோ எனும் அறிஞர் தமது 'அரசியல்' எனும் நூலில் வகுத்துக்காட்டுவதும் ஓர் அரசியல் அமைப்பே கம்பர் தம் இராமாயணத்தில் கோசல நாட்டைப் பற்றிக் கூறும் போதும் அரசியல் அம்சங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதை விளக்கிச் செல்கிறார். ஆனால் வள்ளுவர் காட்டும் அரசியல் முறையோ நடைமுறைச் சாத்தியமானது. அன்றும் பொருந்தியது; இன்றும் பொருந்துவது. தமிழ்நாட்டின் தலைசிறந்த சிந்தனையாளர் அவர். "நவில் தொறும் நூல் நயம்" என்றது அவருக்கே பெருந்தும்.

வள்ளுவரின் அரசியல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. கிரீஸ், ரோம் நாடுகள் நாகரிகமுற்று விளங்கிய காலம் அது. அலெக்ஸாந்தரும், யூலியஸீஸரும் ஆண்டகாலம் அது. வள்ளுவர் கூறுவதும் முடியாட்சிதான். 'இறை மாட்சி', "ஆறும் உடையான் அரசருள் ஏறு", "வேந்தர்க்கியல்பு" எனும் தொடர்கள் முடியாட்சியைக் குறிக்கின்றன. மார்க்ஸ் காலமுதலே பொதுவுடைமையாட்சி ஏற்பட்டது. குடியாட்சி தொடங்கி சில நூற்றாண்டுகளே ஆகின்றன. வள்ளுவர் தமது அரசியல் அரங்கில் குறிப்பிடும் பல அம்சங்கள் முடிதாங்கிய குடியாட்சியைக் குறித்து நிற்பதையும் காணலாம். வள்ளுவரின் அரசியற் கருத்துக்களில் பொதுவுடமை வாதப் போக்குகளையும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இயற்றலும், ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் ஆகிய நான்கு வல்லமையும் அரசர்க்கு வேண்டுமென்கிறார். கடைசியாக அவர் குறிப்பிடும் வகுத்தல் என்பதை அடியொற்றியே அதாவது சொத்தைப் பொதுவாக வகுப்பதைக்கொண்டே பொதுவுடைமை தோன்றியது. வேந்தன் என்ற வழக்கு காலம் கடந்துவிட்டது. இன்று அவ்விடத்தில் ஆட்சித் தலைவன் அமர்ந்துவிட்டான். எனவே வள்ளுவர் எவ்வாட்சி முறைக்கும் பொருந்தக்கூடிய அடிப்படைத் தத்துவங்களை வலியுறுத்தியே தமது அரசியலை வகுத்தார் என்பது தெளிவாகிறது.

**அ. அப்துல் அஹத்**
B.A. (cey.), Dip. in. Ed., SLEAS.
உபஅதிபர்
ஸாஹிராக் கல்லூரி
கொழும்பு.


*With best Compliments*
*From*



# B.P. MOHAMED & BRO.

No. 242, Main Street,
Negombo.
Phone : 031-22164

*With best Compliments From*



RANJANAS ESTD 1945


# Ranjanas

*Specialist in Wedding Sarees*

PIONEERS IN THE FIELD OF TEXTILES

No. 127, Main Street, Colombo - 11.
Phone : 320824, 320834 Fax : 335294
E-mail : ranjanas@itmin.com

*With best Compliments From*



# Gnanam Imports (Pvt) Ltd.,

No. 180/1/123 People's Park Complex,
Colombo 11, Sri Lanka.
Tel : 449255, 439334, 441944

*With best Compliments*

*From*



# ROHANS

EMPORIUM (PVT) LTD.

*An Exclusive Garment Shop*

**73, Main Street, Colombo 11.**
**Tel: 440139, 343478 Fax: 327182**
**3-14, 2nd Floor, Majestic City, Bambalapitiya, Colombo 04.**
**Tel: 555754**
**1-54 1st Floor, Liberty Plaza,Colombo 03.**
**Tel: 565444**

*With Best Compliments from*

# Priyatharsani Stores

*Exporters and Dealers of Scrap Iron, Aluminium, Brass, Etc.*

578, Dematagoda Road,
Dematagoda.


*With Best Compliments from*

Gamma Pharmaceuticals (Pvt) Ltd.

Interpharm (Pvt) Ltd.

476, Union Place, Colombo 02, Sri Lanka.
Tel : 698078, 696071, 698054 Fax : 94-1-696427
Factory : Madapatha Road, Piliyandala. Tel : 614121, 614322, Fax : 613458

## ORGANIZING COMMITTEE - 1999



Seated L.R. : N. Shangeeth Kanna, S. Karthick, R. Rathisan, T. Sarvana, S. Ragulan, P. S. Senthuran, T. Yogendran, Mafaz, S. Kirubanathan,S. Kajendran

Standing (1st Row) L-R : B. Baherathan, Y. Thiruchenduran, N.S. Katheesh, S. Senthuran, S. Geerthan, S. Nimalshan, M. Niroshan, K. Gowthamaraj

Standing (2nd Row) L-R : T.Visagan, B. Kandeepan, S. Rukman, A. A. Zanfer, S. Suseendran, S. Lohadaran, T. Abarajithan

Standing (3rd Row) L-R : M. Nesajeevan, S. Nirunthan,S. Vigneskumar,S. Indranath, R. Naresh, Y. Aravinthan

## தூயமனத்திலிருந்து உலகசமாதானத்திற்கு

இவ்வருடம் செப்டெம்பர் 14ம் திகதி சர்வதேச சமாதானதினமாக ஐக்கியநாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ்வருடமானது இந்த ஆயிரமாவது ஆண்டின் (Millennium) இறுதிச்சமாதான ஆண்டாகக் கருதப்படுகின்றது. இந்தத் திருப்பமான நாளில் அடுத்த நூற்றாண்டை எதிர்கொள்வதற்கு உலகின் சமாதானத்தை விரும்பும் எல்லாமக்களினதும் மனங்களையும் திடப்படுத்துவதற்கு ஒரு பிரதிபலிப்பு அவசியமாகின்றது. எனவே இந்த பொருத்தமான பிரதிபலிப்பு என்ன?

ஐக்கியநாடுகள் சபையமைப்பின் கருத்துப்படி UNESCO ன் குறிக்கோளானது பின்வருமாறு அமைகிறது. "சர்வதேசரீதியாக நீதியை மதிப்பதற்காகவும், சட்டதிட்டங்கள் மனிதஉரிமைகள் மற்றும் அடிப்டைச் சுதந்திரம் என்பன இன மத மொழி பால் பேதமின்றி உலகமக்களுக்கு ஊர்ஜிதப்படுத்துவதற்காகவும், நாடுகளிடையே சமாதானத்தையும் பாடுகாப்பையும் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சாரம் மூலம் பகிர்ந்து கொள்ளச்செய்தல் ஆகும்".

ஐக்கிய நாடுகள் சபையானது ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதத்தில் மூன்றாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமையை சர்வதேச சமாதானத்தினமாக கொண்டாட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்வாறு வருடத்தின் ஒருநாளை சமாதானத்தினமாக கொண்டாடுவதானது ஒரு நேர்வழியான; மேலும் மனிதஇனத்தை சமாதானம் என்ற பாதைவழியே இட்டுச்செல்வதற்கான ஒரு பிரதானமார்க்கமாகக் கருதப்படுகின்றது. அத்துடன் உலக மக்களின் தூய மனங்களாகிய பயிர்ச்செய்கை நிலத்தில் சமாதானப்பயிர்கள் துளிர்விடுவதற்கு இது ஓர் ஊன்றுகோலாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுத பரிஹரணம், யுத்தநிறுத்தம், சச்சரவுகளுக்கான சமாதானத்தீர்வுகள் மற்றும் மனித உரிமைகளின் அபிவிருத்தி என்பனவெல்லாம் உலகசமாதானத்திற்குத் தேவையான அம்சங்களாகும். ஆனால் அதே வேளை UNESCO ன் ஒரு கூற்றான "யுத்தமானது மனிதனது மனதில் இருந்தே உருவாகுவதால் அதற்கு எதிரான சமாதானத்திற்கான பாதுகாப்புக் கொள்கையும் மனிதனுடைய மனத்திலேயே கட்டியெழுப்பப்படவேண்டும்" என்பதன்படி சர்வதேச சமாதானத்தினத்தன்று உத்தியோகபூர்வமான, உத்தியோகபூர்வமற்ற செயற்பாடுகள் யாவும் முக்கியமான குறிக்கோளான சமாதானம் என்பதைக் கருத்திற்கொண்டே செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

UNESCOன் பிரதான கருத்தின்படி ஒவ்வொரு தனிமனிதனினதும் மனமாகிய பயிர்செய்கை நிலத்திலிருந்தும் உலகசமாதானமாகிய விதைகள் முதன்மையாகத் துளர்விடுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு அவசியமாகின்றது. இந்த வாக்குவாதத்தை நிறுத்துவதற்கு ஒருவர் அதிகமான ஆதாரங்களைப் பல்வேறுபட்ட மூலகாரணங்களை ஆராய்வதன் மூலம் கண்டறிதல் வேண்டும். ஒரு உதாரணமாக இந்த நோக்கத்திற்கான ஆராய்வுகளை உணர்வதற்காக சகல மதத்தவர்களது புனிதநூல்களை எடுத்து நோக்கலாம். அத்துடன் ஒருவர் இந்துசமயம், கிறிஸ்தவமதம் அல்லது வேறு ஏதேனும் மதங்களில் யாதேனும் ஒன்றிலிருந்து இதனைப்பற்றி மேலும் விரிவாக ஆராயலாம்.

ஒருவர் இந்நோக்கம் தொடர்பான முழுமையான ஆதாரங்களை சேகரிப்பதற்காக இரண்டாவது மூலகாரணமாக அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிருக்கலாம். இவற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தினைத் தெரிவுசெய்து அதனைப்பற்றி ஆழமாக விபரிக்கலாம். உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான ஆவல் மக்களின் மனங்களிலிருந்து விருத்தியடைய வேண்டும் என UNESCO வலியுறுத்துகின்றது. அத்துடன் தூயமனமுள்ள மனிதர்கள் சமாதானத்தை நிச்சயமாக விரும்புவார்கள் என்பதற்கையமில்லை.

சமாதானத்தை விரும்பாத மனிதர்களின் மனங்களை களைகள், கற்கள், முட்கள், வேர்கள் நிறைந்த நிலங்களக்கு ஒப்பிடலாம். ஒரு பாழ்நிலமானது உற்பத்திகளற்ற, பயனற்ற ஒரு பிரதேசமாகும். ஒருவரும் இந்நிலத்திலிருந்து பயன்கள் எதனையும் பெறமுடியாது.

சமாதானத்தை விரும்பும் ஒரு விவசாயி ஆழ்ந்த அறிவைப்பெற்று அதற்கமையச் செயற்படத் தீர்மானிப்பான். அவன் இந்தக்காணியை வாங்கி களை, கல், முள், வேர்களை அகற்றி மண்ணைக்கொத்தி வளமாக்கிகள் இட்டு பயிர்ச்செய்கைக்குப்பயன்படுத்துவான். இதனால் பாழ்நிலமானது பயன்தரக்கூடிய பலநற்பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வளமிக்க மண்ணாக மாற்றப்படுகின்றது. எனவே இந்நிலமானது தன்னகத்தே வளமுள்ள விதைகளை வரவேற்று துளிர்விட்டு படிப்படியாக முதிர்ச்சியுற்று வளமிக்கபாரிய மரங்களாக வளர்ச்சியடைந்து மேலும் பல பூக்களையும் பழங்களையும் தன் கிளைகள்வழியே பெருக்கமடைந்து உருவாக்க இடமளிக்கும்.

அபிவிருத்தியடையாத மனிதமனங்களாகிய நிலங்களை பண்படுத்தப்படாத கவனிப்பாரற்ற தரிசுநிலங்களுக்கு ஒப்பிடலாம். ஆனால் இதிலுள்ள நற்செய்தி என்னவென்றால் இவற்றினை அபிவிருத்தியடையச்செய்யவோ, மாற்றங்களை ஏற்படுத்தவோ முடியும். களை, கல், முள், வேர் ஆகியவற்றை கொடூர உணர்வுகள், இனிமையற்ற சிந்தனைகள், குரோத உணர்வுகள், ஆசை, ஏமாற்றம், கோபம், ஆகியவற்றுக்கு ஒப்பிடலாம். பாழ்நிலங்கள் போன்ற மனங்களை பண்படுத்தி அபிவிருத்திசெய்யலாம்.

ஒரு தூய்மையாக்கப்பட்ட மனமானது உழவுசெய்த ஒரு தயாரான நிலமாகக் காணப்படும். இது இணக்கமான குணங்களினையுடைய யோசனைகள் போன்றவற்றை எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையில் காணப்படும். அது நேரான சமாதானச் சிந்தனைகள், உணர்வுபூர்வமாக அன்பு, இரக்கம், மகிழ்ச்சி ஆகியவற்றை வரவேற்பதற்காக தனது கதவுகளைத் திறந்து வைத்திருக்கும்.

முள்ளும், கல்லும் நிறைந்த ஒரு பண்படுத்தப்படாத நிலம் சுத்தமானவிதைகளை வரவேற்று தனது மனக்கதவுகளினைத் தட்டவிடாது. இம் மனக்கதவைத் திறப்பதற்கு எதிரான, வெறுக்கத்தக்க பேரழிவை உண்டாக்கக்கூடிய துன்பமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய போர், தீயசிந்தனைகள் போன்றவற்றை முற்றாக உடைத்தெறிந்து மூவகைப் பயன்களாகிய சமாதானம், நன்மையைத் தரக்கூடிய ஒற்றுமையும் திடநம்பிக்கை, மற்றும் இரக்கச்சிந்தை ஆகிய வீரியமிக்க விதைகளை நாட்டி சமாதானப் பூக்களும், பழங்களும் உருவாவதற்கு மனித மனங்களைத் தூய்மைப்படுத்தி சமாதானம் என்ற பயனுள்ள இன்பந்தரக்கூடிய மரங்களை ஒவ்வோர் மனிதமனங்களிலிருந்தும் உருவாக்குவோமானால் உலகில் மட்டற்ற மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும்.

T. பிரசாந்த்
13 Sc L
கணிதப்பிரிவு

பழங்கால ஆயுதங்களை அருங்காட்சியத்தில் நாம் பார்க்கின்றோம். அவற்றை எடுத்துக் கொண்டு போர்புரிய தொடங்குவதில்லை. அதுபோலவே பழமையான கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.

- அறிஞர் அண்ணா -

With best Compliments From



# A Well Wisher

*With best Compliments From*


# GREEN GLOBAL

## TRAVELS & TOURS

- Visa Formalities
- Airline Ticketing
- Travel Insurance
- Travelers Cheques
- Hotel Reservation
- Inbound/Outbound Tours

No. 34/1, 1/1, Iswari Road, Pamankade, Colombo 06, Sri Lanka
Tel : 599520, 556375, 075-357555, Telefax : 075-357655
E-mail : greenglb@eureka.lk

*With best Compliments From*




P.O. Box 5,
Haldummulla

*With best Compliments From*




# ANANDAAS

**Wholesale & Retail Dealers in Textiles**

209, Olcott Mawatha, Colombo 11.
Tel: 447662, 335139

*With best Compliments From*



# Brightt Graphic Communication

**Local / IDD Calls, Typesetting, E-mail, Internet Services, Computer Typing, Fax, Air Ticketing, Bridging Calls,Courier Service, Photo Copy, Laminating, Binding, Translation**

No. 55, Manning Place, Wellawatta, Sri Lanka.
Tel: 504495, 075-514417, 074-515276 Fax: 074-515276
E-mail: brightt@vinet.lk
Website: www.Brightt.com

*With best Compliments From*

## SRI RANGAN TRADING COMPANY

**General Merchants & Commission Agents for Local Produce**



200, 202, 4th Cross Street, Colombo 11, Sri Lanka.
Phone : 325464, 441401

*With best Compliments From*



## SEN BROS

*Commission Agents*

166, 4th Cross Street, Colombo 11.
Phone : 334479, 075-330592

# புதிய பாடத்திட்டம் புதிய ஈழ வரலாறு

ஆசிரியர் மாணவனிடம் கேள்விகள் சில கேட்கிறார்.
ஏனெனில் இது புதிய பாடதிட்டத்தின் படிமுறைகள்.
வாய் மூலப் பரீட்சை.

ஈழக் குடிசைக் கைத் தொழில் ஒன்று ?
பெற்றோல் குண்டு தயாரித்தல்.
ஈழப்பாரிய கைத்தொழில் ஒன்று ?
கள்ள நோட்டு, பிறப்புச்சான்றிதல், அடையாளஅட்டை
என்பன தயாரித்தல்.
ஈழத்தின் மிகப்பெரிய வாடிக்கையாளர்கள் ?
உயிர்க் கொலைகள், போர்கள், இனப்பிரச்சனைகள்.
ஈழத்தின் உத்தரவாதப் பத்திரமற்ற பொருட்கள் ?
பெண்களின் கற்பும், மனித உயிர்களும்.
ஈழத்தின் பெருவரவேற்புள்ள தொழில் ?
விபச்சாரம், ஆட்கடத்தல், கொலை செய்தல்.
ஈழத்தின் புதிய வீடமைப்புத்திட்டம் ?
அகதி முகாம்கள் .

அப்படியானால்,
நாட்டில் அமைதி நிலவுவது எப்போது ?
மக்கள் சமாதானமாய் வாழ்வது என்று ?

இதனைக் கேட்ட மாணவன்,
சிறிது யோசித்தான். சிரித்தான்.
பின்பு விடைதனைக் கூறினான்.
"அரசியலில் பற்றுள்ளோருக்கு
தேசியத்தில் பற்றில்லை,
பணங்காசில் பற்றுள்ளோருக்கு,
சமாதானத்தில் பற்றில்லை.
தேசமும் தேசியமும் ஒன்றென நினைத்தால்
சமாதானம் தானே வரும்.
உள்மனமும் புறமனமும் வெளிப்படையாய் இருந்தால்
அமைதி தானே வரும்."
இதனைக் கூறிய மாணவன்,
"ஐயா, இன்னும் பல ஆண்டுகளுக்கு இது விடையற்ற கேள்வி".

D.J. PRAGASH
10Q.

*With best Compliments*
*From*

# Lanka Aluminium Suppliers


No. 34, Dam Street, Colombo 12,
Sri Lanka.
T' Phone : 437448 Fax : 347545

*With best Compliments*
*From*

# BODHRAJA ALUMINIUM

No. 230, Bodhiraja Mawatha,
Gasworks Street, Colombo 12. Sri Lanka.
Phone : 422999, 342208
Fax : 347545

*With best Compliments*
*From*



# MicroMillenium Information Systems

**Software Development, Sale of Computers and Accessories, Networking and IT related services**

367 1/1 A Galle Road, Ratmalana.
Phone: 074-205782 Fax: 01-725446
Mobile: 078-610078
E-mail: MMIS@Mail.com

*With best Compliments From*





NEW

# BERUWELA CHEMISTS

No. 20 A, Stace Road,
Colombo 14.

*With best Compliments From*







# PIYASIRI ENTERPRISES (PVT) LTD.

**C. I. C. Paint, PVC & Electricals Goods Etc.**

98, High Level Road, Kirulapone.
Tel : 820489

# மாணவர் திறன் காண் போட்டிகள் 1999

வேத்தியர் நாம் இந்து மாணவர் மன்றத்தினால் வருடாந்தம் நடாத்திவரும் மாணவர் திறன் காண் போட்டிகளை இந்த ஆண்டு வழமையை விட சிறப்பாக அதிகப் போட்டிகளுடன் அதிக மாணவர்கள் பங்கேற்கும் வகையில் 28/06/99 அன்று நடாத்தி முடித்த பெருமையுடன் இன்று உங்கள் முன்........

சில ஆண்டுகள் தடைக்கற்களை கண்டும் தடக்காது தாண்டிச்சென்று, சென்ற ஆண்டு முதல் தன் பணியை முன்னெடுத்து வரும் எமது இந்து மாணவர் மன்றமானது இவ்வாண்டு மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக மொத்தம் பதின்நான்கு போட்டிகளை நடாத்தியமை எமது துரித எழுச்சியின் கன்னி வெற்றி எனலாம்.

இந்த ஆண்டு எம் மன்றம் எடுத்துக்கொண்ட இந்த பெரும்முயற்சியில் நானூற்றி முற்பத்தியிரண்டு மாணவர்கள் பத்தொன்பது வெவ்வேறுப்பட்ட பாடசாலைகளிலிருந்து பங்கெடுத்துக் கொண்டமை பாடசாலைகள் வரலாற்றில் றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் சாதனையாக பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

நாம் இத்தருணத்தில் எமது போட்டிகளுக்கு சகலவிதத்திலும் ஒத்துழைத்து நடுவர்களாக கடமையாற்றிய திருமதி. பூமணி குலசிங்கம் அம்மையார் அவர்களுக்கும், செல்வி. சிறிகுமாரி கதிரித்தம்பி அவர்கட்க்கும், திரு. இராஜஇராஜேஸ்வரன் அவர்கட்க்கும், எமது இளைப்பாறிய ஆசிரியை திருமதி. நடராஜமூர்த்தி அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிநடத்திய ஆசிரியப் பெருந்தகைகளுக்கு உள்ளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் எமது போட்டிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்க்கும், எம்முயிர் மாணவ தோழர்களுக்கும் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும் என்றென்றும் உரித்தாகட்டும்.

மாணவர் திறன்காண் போட்டிகளில் கலந்து சிறப்பித்த அனைத்து பாடசாலைகளுக்கும் எமது கோடானு கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.

அத்துடன் றோயல் கல்லூரியின் ஏனைய தமிழ் மன்றங்கள் நடாத்தும் போட்டிகளிலும் கலந்துகொண்டு உங்கள் ஆதரவை வழங்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

எதிர்வரும் காலங்களிலும் உங்கள் ஆதரவை நல்கி நிற்கும்,

செயற்குழு 1999/2000

*With best Compliments*

*From*

# CONSOLIDATED PLASTIC (PVT) LTD.

Manufactures and Dealers of all Plastic Products



***237/4, Hekkitta Road, Wattala.***

***Phone : 075-339716, 072-285226***

# றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளின் முடிவுகள்

## மேற்பிரிவுக்கான முடிவுகள்

கட்டுரை

1. T. உமாகாயத்ரி — சைவ மங்கையர் கழகம்
2. N. ஐங்கரன் — உவெஸ்லி கல்லூரி
3. R. சுகந்தினி — நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

கவிதை

1. A. A. M. அன்சீர் — நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
2. K. கிருஷ்ணவேணி — சைவ மங்கையர் கழகம்
3. S. மதுராந்தகி — நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

சிறுகதை

1. S. J. நிருபன் — கொழும்பு இந்து கல்லூரி
2. A. R. திருச்செந்தூரன் — கொழும்பு இந்து கல்லூரி
3. S. ஜெயந்தி — புனித பிரிஜட் கன்னியர் மடம்
3. J. டிலக்சன் — பரி. தோமாவின் கல்லூரி


பேச்சு

1. L. கருணாகரன் — விவேகானந்தா கல்லூரி
2. G. ரஜீவ் நிர்மலசிங்கம் — கொழும்பு இந்து கல்லூரி
3. T. G. மீநீலங்கோ — கொழும்பு இந்து கல்லூரி

சைவ நெறி

1. I. சன்ஜயன் — D. S. சேனாநாயக்க கல்லூரி
2. S. அனுஷா — கொழும்பு மெதடிஸ்ட் கல்லூரி
3. V. முகுந்தன் — உவெஸ்லி கல்லூரி

*With best Compliments*
*From*




SRI MUTHUMARI STORES

**General Merchant**

150, Colombo Street, Kandy, Sri Lanka.
Phone : 08-34205, 072-62293

## மத்தியபிரிவுக்கான முடிவுகள்

**கட்டுரை**

| | | |
|---|---|---|
| 1. | S. அஜந்தா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| 1. | E. நிருஷியா | இராமனாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 3. | R. சுகன்யா | சைவ மங்கையர் கழகம் |
| 3. | I. ருக்ஷான் | கொழும்பு இந்து கல்லூரி |

**கவிதை**

| | | |
|---|---|---|
| 1. | A. S. காயத்ரி | இராமனாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. | S. கார்த்திகா | கொழும்பு மெதடிஸ்ட் கல்லூரி |
| 3. | A. உமாவாசன் | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |

**சிறுகதை**

| | | |
|---|---|---|
| 1. | I. நர்த்தினி | சைவ மங்கையர் கழகம் |
| 2. | L. ஸ்ரீரேகா | சைவ மங்கையர் கழகம் |
| 3. | S. அழகேஸ்வரன் | புனித சூசையப்பர் கல்லூரி |

**பேச்சு**

| | | |
|---|---|---|
| 1. | S. லம்போதரன் | கொழும்பு இந்து கல்லூரி |
| 2. | K. பிரபாஜினி | விவேகானந்தா கல்லூரி |
| 3. | ஸ்ரீபிரியா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| 3. | சத்தியநாதன் | கொழும்பு இந்து கல்லூா |

**திருக்குறள் மனனம்**


| | | |
|---|---|---|
| 1. | P. சசிகலா | விவேகானந்தா கல்லூரி |
| 2. | M. ஜெனுஷா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| 3. | T. சர்மிளா | சைவ மங்கையர் கழகம் |

தீமைகளை எதிர்க்கும் ஆற்றலைப் பெற்ற பிறகுதான்
அகிம்சை சிறந்த குணமாக அமையும்.

- சுவாமி விவேகானந்தர் -

*With best Compliments*

*From*



# SHIFANA'S

Wholesale Textile Merchants

Special For Batiks

70/1A, 3rd Cross Street, Colombo 11, Sri Lanka.

Tel : 332333, 075 - 363388

## கீழ்பிரிவுக்கான முடிவுகள்

<u>கட்டுரை</u>

| | | |
|---|---|---|
| 1. | S. மயூரி | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| 2. | P. பிரசன்னா | D. S. சேனாநாயக்க கல்லூரி |
| 3. | P. காயத்ரி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |

<u>பேச்சு</u>

| | | |
|---|---|---|
| 1. | T. அதிஷ்டபிரதா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| 2. | K. ராதாதுளக்சி | சைவ மங்கையர் கழகம் |
| 3. | S. சிந்துஜா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |

<u>தேவார மனனம்</u>

| | | |
|---|---|---|
| 1. | G. கிரிஷாந்த் | கொழும்பு இந்து கல்லூரி |
| 2. | S. ஹேமசுதா | விவேகானந்தா கல்லூரி |
| 3. | S. சிந்துஜா | சைவ மங்கையர் கழகம் |

<u>திருக்குறள் மனனம்</u>

| | | |
|---|---|---|
| 1. | S. வத்சலா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. | K. நிலக்ஷன் | D. S. சேனாநாயக்க கல்லூரி |
| 3. | சஞ்ஜீவ் | புனித பேதுரு கல்லூரி |

துன்பம் என்பது இறைவனின் வரப்பிரசாதமே.
அது அவனது கருணைக்கு அடையாளமாகும்.

- ஸ்ரீ சாரதா தேவியார் -

*With best Compliments*
*From*



# SRI THIRUPPATHY
## (Pvt) Limited

*General Merchants, Commission Agents & Importers*

No. 130, 4th Cross Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 329676, 424481 Fax : 342682

# சென்று வா; நீ வென்று வா...!

றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தினூடு
எம் மாணவர்கள் பங்குபற்றிய பாடசாலை மட்டப்
போட்டிகளும் முடிவுகளும்

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம் 8/5/99 அன்று நடாத்திய போட்டிகளில் எமது மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள்.

**தங்கப் பதக்கம் வென்றோர்**

| | | | | |
|---|---|---|---|---|
| P. S. செந்தூரன் | – | கவிதை | – | மேற்பிரிவு |

**வெள்ளிப் பதக்கம் வென்றோர்**

| | | | | |
|---|---|---|---|---|
| N. நிஷாந்தனன் | – | பேச்சு | – | மத்தியபிரிவு |
| Y. திருச்செந்தூரன் | – | கட்டுரை | – | மத்தியபிரிவு |

**வெண்கலப் பதக்கம் வென்றோர்**

| | | | | |
|---|---|---|---|---|
| T. யோகேந்திரன் | – | பேச்சு | – | மேற்பிரிவு |
| B. ரமேஷ்கண்ணா | – | கட்டுரை | – | மேற்பிரிவு |
| T. துவாரகன் | – | தேவார மனனம் | – | கீழ்பிரிவு |

இவர்களுக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தால் 6/8/99 அன்று நடாத்தப்பட்ட கலைவிழாவினில் வழங்கப்பட்டது.

கஷ்டங்களை நாம் அனுபவித்தால்தான்,
பிறகு நாம் சுகத்தின் அருமை தெரிந்து நடந்து கொள்ள முடியும்

- ராஜாஜி -

*With best Compliments From*

# ROYAL AGENCY

*Exporters, Importers & Indenting Agent*

23/4, Vivekananda Hill, Colombo 13.
Phone : 94-1-424153, 434813
Fax : 94-1-434813

*With best Compliments From*

# New Vishnu Trading Co.

174, Fourth Cross Street, Colombo 11.
Phone : 324364, 434874

**எமது சகோதர பாடசாலையான பரி. தோமாவின் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தால் 3/7/99 அன்று நடாத்திய போட்டிகளின் முடிவுகள்.**

<u>முதலாம் இடங்கள்</u>

| | | |
|---|---|---|
| T. சிறிரமனன | – பேச்சு | – கீழ்பிரிவு |
| A. ஹரிஷன் | – கட்டுரை | – கீழ்பிரிவு |
| N. நிஷாந்தனன் | – பேச்சு | – மத்தியபிரிவு |
| P. S. செந்தூரன் | – கவிதை | – மேற்பிரிவு |

<u>இரண்டாம் இடங்கள்</u>

| | | |
|---|---|---|
| S. கஜேந்திரன் | – சிறுகதை | – மேற்பிரிவு |
| T. யோகேந்திரன் | – பேச்சு | – மேற்பிரிவு |

இவர்களுக்கான சான்றிதழ்கள் 09/10/99 அன்று நடைபெற்ற பரி. தோமாவின் இந்து மாணவர் மன்றத்தின் வாணி விழாவில் வழங்கப்பட்டது.

இவர்கள் போல் இனிவரும் மாணவர்களும் மேலும் பல வெற்றிக்கனிகளை பறித்து றோயல் கல்லூரிக்கு பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.


"வாழ்க வளமுடன் வளர்க திறனுடன்"

செயற்குழு 1999/2000

பல்வேறு போராட்டம், உழைப்பு ஆகியவற்றிற்கிடையில் ஒருவன் உண்மையே பேசவேண்டும்.

- இந்து மதம் -

*With best Compliments*
*From*



# INTIMAT TRADERS

(Star Trade Center Market)
85/1, Second Cross Street, Colombo 11, Sri Lanka.
Tel : 446642

*With best Compliments From*



# RAVI TEX

**Dealers in**
**Textile Readymade Garments**

**Velona Market**
112/3, Keyzar Street, Colombo 11.
Phone : 472144

*With best Compliments From*

# *Gayathri Impex*

**General Merchants & Commission Agents**

151A, Maliban Street, Colombo 11.
Phone : 343310

*With best Compliments From*

# REVISION & PAPER CLASS

## G.C.E. (O/L) Dec 1999

**MATHS (42)** : *Mr. S. K. Jeevamohan*
**MATHS (45)** : *Mr. K. Keerthi*
**SCIENCE (41 & 44)** : *K. Sachchi*

**Day Class**
01.10.99
9.00 a.m.

**Weekend Class**
05.10.99
4.00 p.m.

**'APSSVIEILLE'**
309, 4/4, Galle Road, Wellawatta, Colombo 06.
Phone : 075-522041

*With best Compliments From*

# *PHARMA ASSOCIATES*

*Pharmaceutical Importers & Distributors*

No. 155-1/2B, First Floor, Prince Street, Colombo 11.
Phone : 437411, 336592, 074-710298
Fax : 424130

*With Best Compliments from*

# BRILLIANT TEX

**(SOUTH MARKET)**
**WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES**

55 A/8, 3rd Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 439272, 336692


*With Best Compliments from*

# Priya Stores

***Exporters and Dealers of Scrap Iron, Aluminium, Brass, Etc.***

92, Negombo Road, Wattala.
&
167, Hikkitta Road, Wattala.

# INTERMEDIATE AND JUNIOR COMMITTEE - 1999



Seated L-R : Y. Thiruchendhuran, T. Jeyapragash, J. Jeyaragavasingham, Nitharshan, N. Nishanthanan, M. Dilakshan

Standing (1st Row) L-R : S. Aravindh, J. Prashanthan, M. Arunkumar, W. Viveck, S. Ravishankar, R. Janarthanan, V. Sumugan, Y. Laharingan, T. Kabilan,

Standing (2nd Row) L-R : P. Dinesh Kumar, K. Nivethithan, S. Kumanan. (Absent. Reshaa), Rohan, S. Kiriharan, Maharamanan, V. Vinoth

Standing (3rd Row) L-R : Janarthanan, S. Ragujan, Branavan,

Standing (4th Row) L-R : S. Vithushanan, R. Solan, M. Nishananda

# சில வினாக்களும் விடைகளும்

காலத்தை விட வேகமாக
சுழன்றது கடிகார முள்ளும் கூட
பகலை தன்போர்வையால்
மூடிய பகலவன் போர்வை
எடுத்த பிறகு,
மூண்ட இருளுக்கு விளக்கென
இரவில் எழுந்தான் சந்திரன்

காலைமுதல் மாலைவரை
உலக நடப்புக்களில் ஆடிப்போன
மனிதனுக்கு........
இரவுதான் நிம்மதியின்
அடைக்கலத்தை தருகிறது

வேட்டைதேடி அலைந்த சிங்கம்
ஆறுவது இரவில்தான்
வேட்டைதேடி ஆந்தை
அலைவதும் இரவில்தான்

கவலை மறக்க மனிதன்
உறங்குவது இரவில்தான்
கவிதை புனைய கவிஞன்
அலைவதும் இரவில்தான்

இரவிற்கே உரிய மகத்தான
வலிமை,
பகலில் களைத்து போன
என்னையும் துணைக்கு அழைத்தது

களைத்து போன உடலுக்கு
நிம்மதி தேடி,
குளிர்ந்த காற்று உறவாடும்
கடலிலே மனக்கேள்விகளுக்கு
விடை தேடினேன்

காலையில் கேட்ட கதை காதில்
பல கேள்விகளை மோதவைத்தது

"கடவுள் உன் முன் தோன்றினால்
என்ன கேட்பாய்?"
சிறியோரை கேட்ட கேள்வி
பெரியோன் எனையும்
சிந்திக்க வைத்தது

"கடவுள் என்றால் என்ன?
கடவுள் என்பது உண்டா?
உண்டென்றால் அது ஜடமா?
அன்றி உயிருள்ள உடலா?
என கேள்விகளால் எனை
துளைத்தது மனம்

கல்லிலே தன்கைவண்ணம் காட்ட
சிற்பி வடித்த சிலைக்கு தம்
சொத்தையே எழுதும் மனிதர்கள்
எத்தனை முட்டாள்கள்
என்றது என் மனம்.

கடவுளை ஆராதிப்பது ஆத்திகம்
கடவுளை நிந்திப்பது நாத்திகம்
ஆத்திகத்திலே ஆர்வம் கொண்டநான்
நாத்திக கேள்விகளால
குழம்பி போனேன்.

திடீரென்று......
பட்டுதெறிந்து கொண்டிருந்த
வெள்ளொளி மறைந்து போனது
மின்னல் வெட்டியது போன்ற உணர்வு
ஆனால் வானில் வெளிச்சமில்லை

இடி இடித்தது போன்ற உணர்வு
ஆனால் வானில் மேகமில்லை.

இமைகள் மடங்கி கண்மணி
சுருங்கியது எதிர்வந்த ஒளிகண்டு,
எதிர் கண்ட ஒளி வெள்ளம்
கண்டால், பகலவன் கூட
சட்டென கூனிக் குறுகிவிடுவான்
சந்திரன் கூட ஒளி கண்டு
பலகாத தூரம் பறந்திடுவான்

“அடேய் அற்பபதரே”
உன்றது ஓர் அசரீ.
சிற்றறிவு கொண்ட எனக்கு
வந்தது யாரென சட்டென
அறிய முடியவில்லை.
கேட்டு வைத்தேன் ஓர் கேள்வி
“யார் நீ?”

“அடேய் சின்னப்பையா
சக்தி எம்மில் பாதி,
அவள் துணை கொண்டு
உலகை இரட்சிக்கும் சிவன் நானே,
கைலாயமலை என் உறைவிடம்,
கோவில்கள்யாவும் எம் இருப்பிடம்,
இன்னும் புரியவில்லையெனில்
விஷம் உண்டு நீலம் கொண்ட
நீலகண்டனே நான்”
என்றது.

அறிந்தேன், தெளிந்தேன்,
உணர்ந்தேன் பின்பு தொழுதேன்.
யார் என அறிந்ததும்,
நொடியை விட விரைவாக
எம் பெருமான் திருவடி சரண்
சேர கீழே விழுந்தேன்.

“அகிலம் காக்க உதித்த
எம்பெருமானே......
அடியேனின் சிறு விண்ணப்பம்
அடியேன் மனக்கவலை தீர்க்க
இறைவா அருள் புரியவேண்டும்.”
“கேளு உன் கேள்விகளை
ஆனால் மூன்றைத் தாண்டாமல்”
என்றுரைத்தான் இறைவன்.

“முக்கடவுளரில் முழுமுதற்
பெருமானே.......
மெல்ல தமிழினிச் சாகுமா”

“ஹாஹ்ஹா” எனச் சிரித்தான்.
“மொழிகளில் பழையது தமிழ்மொழி
மொழிகளில் சிறந்தது தமிழ்மொழி”

“அமுதிலும் இனிக்கும் மொழி
தேனிலும் சுவைக்கும் மொழி
இளமை தாண்டாத ஜீவமொழி
முதுமை தொடாத புதியமொழி
காவியங்கள் படைத்த காவியமொழி
இனிய மொழி, புதுமை மொழி
தமிழ் மொழி அழியுமா?
தமிழினம் அழிந்தாலும்
தமிழ் மொழி அழியாது........”
என்றான்.

“கேட்க கேட்க இனிக்கின்றது
உன் சொற்கள
உண்மையில் இறைவன்
இறைவன்தான்”.

“போதும் உன் புகழ்ச்சி
அடுத்தது என்ன?” என்றான்
எம் பெருமான்.

"அழகிற்கு ஓர் விளக்கம்
செப்புவாய் எம்பெருமானே?"
என்றேன்.

"எழுத்துக்கு தமிழ் அழகு
முதுமைக்கு நரை அழகு
இளமைக்கு காதல் அழகு
அன்புக்கு தாய் அழகு
உணர்ச்சிக்கு மொழி அழகு
பெண்ணுக்கு நாணம் அழகு
வள்ளுவனுக்கு குறள் அழகு"
மேலும்...

"போதும் போதும் உன் விளக்கம்
நடைபழையது ஆனால்
வார்த்தை புதியது.
அழகுக்கு விளக்கம் தந்தாய்
என் இறுதி வினாவுக்கும்
விடை தந்தருள்வாய்"

எங்கும் இருப்பவன் இறைவன்
எதிலும் இருப்பவன் இறைவன்
சகலரின் மனதில் இருப்பவன்
இறைவன்
சகலர் உடலை படைத்தவன்
இறைவன்
அப்படியிருக்க
உனக்கு முருகன், விநாயகர்
என பல தோற்றம் ஏன்?
என்று வினாவினேன்.

இறைவன் புன்முறுவல் செய்து,
"பக்தனே
இறைவன் என்பது ஒன்றுதான்
ஆனால் எனது உருவங்கள்
என் நிஜத்தின் தோற்றங்கள்"

"என்னை தம்பியாய் நினைப்பவனுக்கு
நான் முருகன்
எனை அன்னையாய் நினைப்பவனுக்கு
நான் சக்தி
எனை தனயனாய் நினைப்பவனுக்கு
நான் விநாயகர்
எனை தந்தையாய் நினைப்பவனுக்கு
நான் சிவன்
என்று என் ஒவ்வொரு
உருவத்திற்கும் ஓர் அர்த்தம்
உண்டு.
வேண்டுவோர் வேண்டியபடி வரம்
தருபவன்தான் இறைவன்"
எனக்கூறி மறைந்தான்.

மறைந்து போன சூரியன்
தன் கதிர்களை படிய வைத்து
என் கண்களை கசக்க வைத்தான்

காலையில் பூங்குயில்கள் காதில்
கானம் பாடி விட்டு சென்றன.
ஆனால் நான் கண்டது
கனவா? அன்றி நனவா?
என இன்றுவரை அறியவில்லை.
அறிந்துகொள்ளவும் எண்ணவில்லை.

(யாவும் கற்பனை அல்ல)

N. சங்கீத் கண்ணா
A/L 2000 Batch
கணிதப்பிரிவு

*With best Compliments From*

# NAVEEN CERAMIC

## (Pvt) Ltd.


***For Quality Wall Tiles, Floor Tiles and Sanitaryware***

307, Geroge R. De.Sila Mawatha, Colombo 13.
Tel : 325406, 345197, 345198 Fax : 335637

## NAVEEN CERAMIC

104, Nawala Road, Nugegoda.
Tel : 074-403025

With best Compliments From



**Mr. S. P. Naganathan**
**(Biology Teacher)**

With best Compliments From

**Mr. Premnath**


WITH BEST COMPLIMENTS FROM



A Well Wisher


*With best Compliments From*

# UVA TEA CENTRE



95, Peer Saibo Street
Colombo 12.
Tel : 345319

*With best Compliments From*



# ADVANTAGE

For your
Radio, T.V., Press Advertisements

85/4 Havelock Road, Thimbirigasaya, Colombo 05.
Phone : 594121

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# ஆறாவது அறிவு

மானிடா! சற்று நில். கவனி
உனக்கு எத்தனை அறிவு?
சொல் சொல்
ஓ...............
மாயங்கள் நிறைந்ததா மானிட வாழ்க்கை?

மனிதா! கடவுளின் கருணையால்
உனக்கு கிடைத்தது ஆறறிவு
ஆனால்..... நீயோ.....
ச்சீ..... கேவலம், கேவலம்

வானவில்லாலும், வானத்து பூக்களாலும்
வடிவமைக்கப்பட்ட இவ்வுலகு இன்று.....
ஓ... நம் வரலாறே இரத்தம் படிந்ததுதானா?
மனிதா உந்தன் ஆறாவது அறிவு எங்கே?

வெள்ளைப் புறாக்கள் அணிவகுப்பு
நடாத்த வேண்டிய எங்கள்
ஊர் வீதிகளில் இன்று
மனித மிருகங்கள் உலாவுகின்றன

அன்னைகளின் கண்ணீரும்
அகதிகளின் அவலங்களும்
சிறார்களின் உதிர்ந்து போன வாழ்வும்
இதோ நம் முன்னேதான்

கண்ணிருந்தும் குருடர்களாய்!
காதிருந்தும் செவிடர்களாய்!
வாயிருந்தும் ஊமைகளாய்!
ஓ... மொத்தத்தில் உன் மனிதமே மிருகமாய்!

ஏ அழுக்கு மனிதா!
அழுகிப்போன,
அவனியுடன் சேர்ந்து
உந்தன் மனமும்தான் அழுகிப்போனதா?

அராஜகம், ஆக்கிரமிப்பு
இம்சை, ஈவிரக்கம்
போன்ற இழி பண்புகளால்
போர்வை போர்த்தியிருப்பவனே!

புறப்படு! புதிதாய்ப் புறப்படு!!
புதுயுகம் அமைக்க
மாற்றானின் மண்டையோட்டில்
மதுவருந்தி மாற்றானை மயக்கும் மானிடா
வா போகலாம்....

துடுப்பில்லாத படகு போல்
இலக்கில்லாமல் வாழ்பவனே
எழுந்திரு – உன் கையில் ஒட்டியிருக்கும்
மண்ணை தட்டினால் மட்டும் போதாது
மனதில் படிந்திருக்கும் தூசுக்களையும் தட்டிவிடு!

ஆறறிவின் உரிமையாளனே!
வாழ்வோரின் வழிகாட்ட வந்த
வள்ளல்களின் வாழ்வை பின்பற்றி
வையகத்தில் ஒளிவிளக்காய் பிரகாசிப்போம்

ஆறறிவின் உறவுக்காரனே!
உலகை சூனியமாக்கும்
சூனியர்களை சுடுகாட்டுக்கு அனுப்பிடுவோம்

மதத்தை வெறியாக்கும்
மதவாதிகளை மண்டியிடச்செய்வோம்
இனத்தை காட்டி
இனவாதத்தை ஊட்டும்
இனவாதிகளை இடுகாடு அனுப்பிடுவோம்.

மானிடா! ஆறறிவின் வாரிசே!!
மனித விழுமியங்களை
உன் இதயத்தில் தூவிடு
அப்போது செழித்து வளருவது
நீயும் உன் சமூகமும்

இரத்தச் சிவப்பேறிப்போன
எங்கள் தேசத்துக்கு
இன்று தேவைப்படுவது
ஆறறிவு படைத்த
மனிதப் புனிதர்களேயன்றி
மனித மிருகங்கள் அல்ல

போரியல் வேட்கைகளை
தாங்களே உற்பத்தியாக்கி
சோலைவனங்களை
பாலைவனங்களாக்கி – பாரினில்
பாதகர்களாய் பவனிவரும்
ஐந்தறிவு மனிதமிருகங்களை
எம் ஆறறிவின்பால் அழைத்திடுவோம்

மானிடா! எம் தேசத்தின்
நாளைய எழுச்சிக்காய்
இன்றே புறப்படு!

விடியலுக்கு தவம்கிடக்கும்
எம் சமூகத்துக்கு – நம்
ஆறறிவின் மூலம் – நாமாவது
விடிவெள்ளியாய் விடியலை அறிவிப்போம்
ஐந்தறிவினால் மனித மிருகமாக மாறியவர்களை
எம் ஆறறிவினால் மனிதப்புனிதர்களாக்க புறப்படு!

யு.யு.ஆ. அன்சீர்
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு

*With best Compliments From*



# SRI KALYANY

## Jewells

No. 05, Sea Street, Colombo 11.
Phone : 323657

*With best Compliments From*



# Sithaara Emporium

*Dealers in Textiles & Readymade Garments*

101, Main Street, Colombo 11.
Telephone : 431917

*With best Compliments*
*From*

# MARUTHI TRADER

**Importers, General Rice Merchants & Commission Agents**

No. 68, Old Moor Street, Colombo 12.
Phone : 424013, 424014

*With best Compliments From*



# ARRUJINA

**Jewellery**

47-A, Sea Street, Colombo 11. Sri Lanka.
Phone : 440042

*With best Compliments From*

# CIMCO METAL CENTER

Importers - Dealers in Engineering Tools
Bolts , Nuts & General Hardware Merchance

**DEWALT & BLACK & DECEKER POWER TOOLS**

405, Sri Sangaraja Mawatha, Colombo - 10,
Sri Lanka.
Tel : 449493, 449940 Fax : 00941-336684

பாடசாலைக்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை.

# மனிதன் மாறிவிட்டான்

மனிதன் ஒரு விலங்கென்றாலும்
மனிதத்தினால் மட்டுமே வேறுபடுத்திக்
காட்டிக்கோண்டு – முன்பொருகாலத்தில்
மனிதன் என்று பீற்றிக் கொண்டோம்.

எல்லோரும் நிச்சயமான மனிதர்களாய்
நிர்மலமான இதயத்திலே
சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும்
நிரப்பிக்கொண்டோம்.

போனதொரு பொற்காலம்
மனிதத்தின் இலையுதிர்காலமாய்
சாத்தானின் வசந்தகாலமாய்
குருதி பூசிக்கொண்டு கோரமுகம் காட்டி வந்தது கலியுகம்.

எந்த மனிதனுக்கும் விரோதமாய்
மிருகமாய் மாறிய அவனிடமிருந்து
காற்றோடு யுத்தக்களத்தின் குருதி ஆற்றிலே
தொலைந்து போனது மனிதம்.

அகிம்சையையும் கருணையையும்
சாத்வீகத்தையும் ஏடுகளில் மட்டும் வாழவிட்டு
யுத்தம் என்ற மனித குலத்தின் பேரழிவுஆயுதத்தை
கையில் எடுத்துக்கொண்டு மிருகமாய் மாறினான்.

ஒன்றான தேவனை
சிவனாயும் புத்தனாயும்
அல்லாஹ்வாகவும் இயேசுவாகவும்
வேறுபடுத்திக்கண்டு குரோதமாய் நோக்கினான்.

வயிற்று பசிக்கு பல்வேறு தொழில்கள்
தீண்டாமைக்கு சில சாதியென்று
வேற்றுமை கண்டு
ஈரமில்லாதவனானான்.

நேற்று வரை கூடிவாழ்ந்தவரை
ஆதிவந்த இடம் வேறொன்று சொல்லி
வாய்கிழியக் கத்தி
மிருகமாய் அலைந்தான்.

மனிதத்தால் மனிதன் என்று அடையாளப்படுத்தாமல்
இன்ன இனத்தவன் என்று
உண்மையறியாத பித்தனாய்
இறுமாப்புடன் சொல்லிக் கொண்டான்.

மனிதர்கள் என்று கைகோர்த்துக்கொள்ளாமல்
இனமத வேலிகளைப் போட்டுக்கொண்டு
தமக்குள் தாமே பிளவுபட்டு
மதம் பிடித்து அலைந்தான்.

சகமனிதனிடமிருந்து காத்துக் கொள்ள
அணுகுண்டுகள் செய்து
தன் உரிமையை பெற்றுக்கொள்ள குண்டுகள் வெடித்து
வேடிக்கைக்குரியவனானான்.

தனக்கு அடுக்கடுக்காய் தங்கச்சி உண்டென்று
நன் மங்கை கரம் பிடிக்க லகரங்கள் கேட்டான்
அம்மங்கையின் அண்ணனை சிறிதும் சிந்திக்காத
இரக்கமற்ற அரக்கனாய்.

மனதிலே கோட்டை கட்டி
வயிற்றுக்குத் துணிகட்டி படிப்பு முடித்து
மேல்படிப்பு படிக்கவென்றால்
அதற்கும் பணம் கேட்டு கோரப்பல் காட்டினான்.

போர்களத்து குருதியில்
கன்னியரின் கண்ணீரில்
இளைஞர்களின் வியர்வையில்
வெட்கிப்போய் மரித்துப்போனது மனிதம்.

இவனிடம் போய் யார் கேட்க
மனிதம் என்ன விலை என்று
அது இறந்து
நூற்றாண்டு ஆனபிறகு.

இவன் மனிதனல்ல
மனிதபோர்வையிட்ட மிருகமாய்
இவனது பரிமாணம் மாறிப்போய்
எத்தனையோ நூற்றாண்டுகளாயிற்று.

A. S. காயத்ரி
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

நான் கடவுளை நேருக்கு நேராகக் காணவிரும்புகிறேன். உண்மைதான் கடவுள் என்று எனக்கு தெரியும். என்னை பொறுத்த மட்டிலும், கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அகிம்சை – அன்பு என்பதுதான்.

- அண்ணல் காந்தியடிகள் -

*With best Compliments From*

**New**

# Gowry Jewellers


**(Air Conditioned)**

*Dealers in 22 ct. Gold Jewellery*

*4/A, Fussels Lane (Near Market)*
*Gall Road, Wellawatte, Colombo 06.*
*Phone : 590132*

*With best Compliments From*

**MISSAKA BOOK DEPOT**
**MISSAKA ENTERPRISES (PVT) LTD.,**



14, Thimbirigasyaya Road,
Colombo 05.

*With best Compliments From*

# Global Access Commodities
# Bala Brothers



UG 180-1/35 A, Peoples Park Complex,
Colombo - 11, Sri Lanka.
Phone: Off : (94-1) 433936, 332955 Res : (94-75) 373541
Fax : (94-1) 445659
E-mail : globalax@panlanka.net
Mobile : (94-77) 327758

*With best Compliments From*

# NEW GANESHA JEWELLERS

267, Galle Road, Wellawatta, Colombo - 06.
Phone : 555651, 503413, 599576

*With best Compliments*
*From*



# *Millers Limited*

**Millers Limited Sole Agents/ Destributors**

* KODAK Photographic Products
* FOSTER'S LAGER
* BONLAC Skim Milk Powder
* FINDLATER'S Finest Scotch Whisky, Wines & Spirits
* KRAFT Products
* Vegemite
* SHEAFFER Writing Instruments
* LITA Full Cream Milk Powder

P.O. Box 100
50, York Street, Colombo 1.
Phone: 329151(5 Lines)

பாடசாலைக்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரைகள்.

## ஸ்ரீஇராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் இந்துசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு.

உலகில் பல மதங்கள் தற்போது காணப்படுகின்றன. அவற்றில் இந்துசமயம் நீண்ட கால வரலாற்றை உடையது. அன்று முதல் இன்று வரை இந்துசமயம் பெரும் மதிப்புடன் மேலை நாடுகளும் உயர்ந்த சமயமாக போற்றுமளவிற்கு பெரும் புகழுடன் திகழ்கின்றது. இந்த சமயத்தின் வளர்ச்சிக்கு பல அடியார்களின் பங்களிப்பும் ஒரு காரணமாக அமைகின்றது. அவ்வாறு இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியவர்களுள் ஸ்ரீ இராமகிருஷ்ணரும் அவரது முதற் சீடரான சுவாமி விவேகானந்தரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தக்கிணேஸ்வரத்தில் வாழ்ந்தவர். அங்குள்ள கோயிலொன்றில் பூசகராக பணிபுரிந்து காளி அம்மனின் அருள் பெற்றவர். ஸ்ரீ இராமகிருஷ்ணா நூலறிவு அற்றவராக இருந்தாலும் அனுபவத்தால் சிறந்த அறிஞர். அவர் இந்து மக்கள் இந்து மதத்தில் ஆர்வமுடையோராய், இந்து மதத்தை நேசிப்பவர்களாய், அதில் ஈடுபாடு கொண்டவர்களாய் இருக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இந்து மக்களுக்கு பல நல்வழிகளைக் கூறி சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்தார். தன்னால் மட்டும் முயன்று உலகிலுள்ள இந்துமக்களுக்கு நல்வழிகளை காட்ட முடியவில்லை. அதனால் தான் கொண்ட இலட்சியங்கள் நிறைவேற அவர் ஓர் சீடனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கனவுகள் இலட்சியங்கள் யாவும் விரைவில் நிறைவேறின.

கல்கத்தா நகரிலுள்ள மக்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிபணிந்த காலமது. கல்கத்தாவில் உள்ள உயர் நீதி மன்றம் ஒன்றில் பணிபுரிந்த விஸ்வநாததத்தருக்கும் அவரது மனைவியான புவனேஸ்வரி அம்மாவுக்கும் செல்வப் புதல்வனாக (1863ம்) வருடம் தைத்திங்கள் பன்னிரண்டாம் நாள் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவர்கள் அக்குழந்தைக்கு நரேந்திரன் எனப்பெயரிட்டனர். நரேந்திரன் சிறுவயதிலே ஆங்கிலம், வங்காளம், சமஸ்கருதம், தமிழ் ஆகிய மொழிகளில் மட்டுமன்று விளையாட்டுத் துறைகளிலும் கலைத்துறைகளிலும் சிறந்து விளங்கினான்.

அதுமட்டுமன்றி இறைபக்தி அவனுடன் கூடவே பிறந்தது போன்று இறைபக்தியிற் சிறந்து விளங்கினான். இவ்வாறு அவன் வளர்ந்து தனது பதினெட்டு வயது நிரம்பிய வாலிபபருவத்தை அடைந்தான். அப்போது அவனுக்கு இறைவனை காணவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. (1881ம்) ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தோராவது வருடம் தக்கிணேஸ்வரத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீ இராமகிருஷ்ணரை

சந்தித்தான். இச்சந்திப்பு ஆன்மீக வரலாற்றில் ஓர் முக்கியமான நிகழ்வாகக் கருதப்பட்டது. அவன் இராமகிருஷ்ணரிடம் "நீங்கள் இறைவனை கண்டிருக்கிறீர்களா?" என வினாவினான். தான் தனது இலட்சியங்களை நிறைவேற்ற காத்திருந்த சீடன் வந்துவிட்டதை உணர்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் "ஆம் குழந்தாய் கண்டுள்ளேன். உன்னை என்கண்முன்னே காணுவது போல் இறைவனையும் கண்டுள்ளேன்" என பதிலளித்தார். தனது ஐயங்கள் தீரவே இராமகிருஷ்ணரிடம் ஐக்கியமானான் நரேந்திரன். அவரிடம் யாவற்றையும் கற்று ஐந்து வருடங்களிலேயே அவரது சீடர்களுக்கெல்லாம் தலைவனானான். தனது இலட்சியங்கள் நிறைவேறும் என அறிந்த இராமகிருஸ்ணர் (1886ம்) ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறாவது வருடம் ஆவணித்திங்கள் பதினைந்தாம் நாள் இறைபதம் அடைந்தார். அவர் ஏற்றிய ஞானதீபம் சுடர்விட்டு எறிய தொடங்கியது. அன்றிலிருந்து நரேந்திரன் சுவாமி விவேகானந்தர் எனப் பெயர் பெற்றார்.

நாம் இந்து மதத்தை நம்நாட்டில் எடுத்துக் கூறினால் பயனளிக்காது. இந்திய மக்கள் எவ்வாறேனும் மேலை நாட்டு மோகத்திலேயே திழைத்திருப்பர் எனக்கருதியவர். நம் இந்து சமயத்தை மேலை நாட்டவர்களுக்கு புரியவைப்பது என்று முடிவு செய்தார். அந்த சமயம் தான் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரில் அகில உலக சர்வமதமாநாடு நடக்கவிருப்பது அவர் காதுகளிற்கு எட்டியது. சுவாமி விவேகானந்தர் அவ்வாறு அம்மாநாட்டில் கலந்து கொண்டது (1893ம்) ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றி மூன்றாம் வருடம். இந்நாள் இந்துமத வரலாற்றிலேயே முக்கியத்துவம் அடைந்த நாள். நம் இந்து மதம் மேலை நாட்டினருக்கும் தெரிந்த நாள்.

அம்மாநாட்டில் உரையாற்றிய பலரும் தத்தம் மதங்களைபற்றி பெருமை கூறிச் சென்றனர். சுவாமி விவேகானந்தர். தனது பேச்சை ஆரம்பிக்கும் முன்னே "அமெரிக்க சகோதர சகோதரிகளே" என ஆரம்பித்து எல்லோரையும் தன்பால் ஈர்த்தார். இந்து மதத்தின் அருமை பெருமைகளை உலகமக்கள் அனைவரும் அறியும் படி செய்தார். மேலை நாட்டவர்கள் இந்து மதத்தை பற்றிக்கொண்டிருந்த தப்பான அடிப்பிராயங்களை அழித்த அவர்களை இந்து மதத்தில் அவர்கள் கற்கவேண்டியது ஏராளமாக உண்டு என உணர்த்தினார்.

இவ்வாறு உலகநாடுகள் அனைத்தையும் இந்து மதத்தை பற்றி அறியச் செய்த (1897ம்) ஆயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்று ஏழாம் வருடம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தார். இந்துமதத்தை உலகறியச் செய்து விட்டு மகனைக்கான கொழும்பு மக்கள் துடித்தனர். அவ்வரிய பாக்கியம் கொழும்பு மக்களுக்கே முதன் முதலில் கிடைத்தது. கொழும்பு நகர் மட்டுமன்றி மாத்தளை, மட்டக்களப்பு, அனுராதபுரம்,

யாழ்பாணம் ஆகிய இடங்களுக்கும் வருகை தந்து அங்கு வரும் மக்களுக்கு பல பிரசங்கங்களையும், உரைகளையும் நிகழ்த்தினார். அவர் கொழும்பு வந்ததன் விளைவாகவே விவேகானந்த சபை உருவாக்கப்பட்டது. இச்சபை மூலம் பல இந்து சமய போட்டிகள், பரீட்சைகள் நடாத்தப்பட்டு இந்து சமயம் மேலும் வளர்ச்சியுற காரணமாய் அமைந்தது.

சுவாமி விவேகானந்தர் மீண்டும் தம் தாய் நாடு திரும்பினார். அவரது குருவின் ஞாபகார்த்தமாக இராமகிருஷ்ணர் மடம், இராமகிருஷ்ணர் அனாதை இல்லம், இராமகிருஷ்ணர் சபை மற்றும்இராமகிருஷ்ணர் மிஷன் என்பவற்றை நிறுவி பல ஏழை எளியோருக்கு உதவி புரிந்தார். அவர் இந்து மக்களுக்கு கூறுவது எல்லாம் "இறைவன் உண்டு என நம்புங்கள். அவ்விறைவனை நீங்கள் காணவேண்டுமெனின் ஏழை எளியவர்களுக்கும் ஊனமுற்றோருக்கும் உதவுங்கள். அவர்களிடத்தில் தான் இறைவன் குடி கொண்டுள்ளான்" என தன்குருவிடம் கற்றவற்றை கூறுவார். ஏழை எளியவர்கள் துன்பப்படும் போது இவர் தாமும் வருந்துவார். இவர் தன் குருவிடம் கற்றதன் படி ஏழை எளியவர்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து துறவியானார். இலக்கியங்களை நிறைவு செய்வதற்கும் ஏழை எளியவர்களின் துன்பங்களைத் துடைக்கவும் தன்னை அர்ப்பணித்து நாற்பது வருடங்களே உயிர் வாழ்ந்து (1903ம்) ஆயிரத்து தொளாயிரத்து மூன்றாம் வருடம் சிவனடி சேர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரும் அவரது சீடரான சுவாமி விவேகானந்தரும் இந்துமதத்தின் வளர்ச்சிக்க பெரும் பங்களிப்பை அளித்து இந்துமதத்தை உலகறியச் செய்தனர். அவர்கள் உருவாக்கிய நிலையங்கள் மூலம் இன்றும் இந்துமதம் வளர்ச்சியுற்று வருகின்றது.

S. அஜந்தா
நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

99
சிவசக்தி
Mithra Jewellers
126-128, Sea Street, Colombo - 11.
Phone : 434435

*With best Compliments From*




# ABI TRADERS
EXPORT & IMPORT

**Dealers in : Korai Mats, Plastic Mats, Everyday, Anupam Stove**

Office : U 6, Anderson flats, Colombo 05, Sri Lanka.
Branch : L.G. 182, People's Park Shopping Complex, Colombo 11.
Tel : 421521 Fax : 430509

*With best Compliments From*




# Maria Jewellers

126-128, Sea Street, Colombo - 11.
Phone : 434435

*With best Compliments From*

**HORIZON SHIPPING COLOMBO (PVT) LTD.,**
**HORIZON CONTAINERS LINE (PVT) LTD.,**
**HORIZON SHIPPING INTERNATIONAL (PVT) LTD.,**



No. 18, Palm Grove, Colombo 03, Sri Lanka.
Tel : 074-714033-7 Hot Line : 074-714000
Fax : 075 - 514514

*With best Compliments From*

# *Saraswathy Stores*

***Dealers in Oilmen Goods & Etc.***





*12, Wolfendhal Street, Adamaly Building, Colombo 13.*
*Tel : 432035 T'Grams : "VEESONS"*

*With best Compliments*

*From*

# SoftPAQ Information Systems

Dealers in Computers, Accessories, Peripherals, Networking, Maintenance services and Software Development



165/2, A-11, Second Floor, City Paradise Complex,
Main Street,Colombo 11, Sri Lanka.
Phone : 077-329050, 075-350400 Fax : 075-350400
E-mail : softpaq@sol.lk

# றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்

பெருமையுடன்
வழங்கும்

# கலைமகள் விழா

## நிகழ்ச்சி நிரல்

இறை வணக்கம்
மங்கள விளக்கேற்றல்
வரவேற்பு நடனம்
சிறுவர் நடனம்
வரவேற்புரை
நடனம்(சிறுவர் நிகழ்ச்சி)
அதிபர் உரை
பரத நாட்டியம்
மலர் வெளியீடு
இடை வேளை
பரிசளிப்பு
பிரதம அதிதி உரை
கரக நடனம்
சரித்திர நாடகம்
சமூக நாடகம்
மீண்டும் தூறல்கள்
நன்றியுரை


**SUBHA**
**RANI** *Jewellers*

*For All your Requirements of 22 Ct Gold Jewellery*

183, Sea Street, Colombo 11, Sri Lanka.
Phone : 447255

Branch:
471/A, Galle Road, Colombo 06.
Tel : 594605, 595109.


## Programme Parade

IRRAI VANAKKAM
LIGHTING OF THE TRADITION OIL LAMP
WELCOME DANCE
CHILDREN'S DANCE
WELCOME SPEECH
DANCE
SPEECH BY PRINCIPAL
BHARATHANATIYAM
SOUVENIR RELEASING
**Interval**
PRIZE GIVING
SPEECH BY CHIEF GUEST
KARAGA DANCE
HISTORICAL DRAMA
SOCIAL DRAMA
MEENDUM THURALGAL
VOTE OF THANKS

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளிலே
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# மானிட வாழ்வில் பகவத்டகீதையின் மகத்துவம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவைப்பிராட்டியின் திருவாக்கு. அரிதினும் அரிதாய் பெற்ற மானிட பிறவு மகத்தானது என்பது இதிலிருந்து புலனாகின்றது. ஆனால் மானிடனாய் உலகில் பிறந்த எந்த மனிதனும் தான் பெற்ற பேற்றை எண்ணி பெருமிதம் கொள்வதில்லை ஏன் பிறந்தோம்? எதற்காக பிறந்தோம்? என்ற கொள்கையின்றி கிண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்க்கைப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றான். மனிதனை நன்னெறிப்படுத்த திரேதயுகத்தில் திருமால் கிருஷ்ணனாக அவதரித்தார். கீதையை உலகிற்கு நல்கினார். இது பகவத் கீதையென சிறப்பு பெறுகின்றது. ஏனென்றால் பகவானே தன நாவினால் தன் பக்தனுக்கு செப்பியமையாகும்.

மகாபாரதம் தலைசிறந்த இதிகாசங்களில் ஒன்றாக போற்றப்படுகின்றது. மகாபாரதக் கதையின இறுதிக்கட்டத்தில் பீஷ்ம பருவத்தில் பதினெட்டாம் அத்தியாயத்தில் பகவத் கீதை பற்றிய விளக்கம் விவரிக்கப்பட்டுள்ளது. பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே யுத்தம்.தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான யுத்தம். நற்சக்திகளுக்கும் தீயசக்திகளுக்கும் இடையிலான யுத்தம். இச்சந்தர்ப்பத்தில் பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனை தேரில் வைத்து தேர்ச் சாரதியாய் வருகின்றான் மாயன். வில்லிலே நாணேற்றி வலிய தோள்களை தட்டி வீறுடன் நிமிர்ந்த அர்ச்சுனன் தனக்கு எதிர்த்திசையில் நிற்கும் வீரர்களை காண்கின்றான். தனக்கு வில்வித்தை பயிற்றுவித்து "வில்லுக்கு விஜயன்" என பார் போற்றும் தகைமையை ஈந்த துரோணர் தந்தையென தாள்பபணியும் பீஷ்மர் சகோதரர்களாய் பழகிய கௌரவர்கள் ஆகியோர் கண்ணில் படுகின்றனர். ஐயோ இவர்களையா நான் வதம் செய்ய போகிறேன் என ஆவி சோர்கிறான். அச்சமயத்திலே தான் நீலவண்ணன் பார்த்தனுக்கு அறிவுரை கூறுகின்றான். இதுவே கீதா உபதேசம் என வழங்கிற்று. இனி கண்ணன் அர்ச்சுனனக்கு செப்பிய கீதையின் தத்துவத்தையும் கீதை மானிட வாழ்வில் பெறும் மகத்துவத்தையும் நோக்குவோம் கண்ணன் கூறுகின்றான், "அர்ச்சுனா, நாட்டை ஆளும் மன்னனின் கடமை மக்களை பாதுகாக்க அதர்மத்திற்கு எதிராக யுத்தம் செய்வது நீயும் அதர்மத்கதிற்பேதராவே யுத்த செய்ய வந்துள்ளாய். ஆதலின் ஊராண்மை காட்டுதல் நன்றன்று. தராசின் நடுத்தண்டைப் போல் நீ இருக்க வேணடும். பந்த பாசங்கள் போர்களத்தில் புறக்கனிக்கப்படவேண்டும் எல்லாவற்றையும் என்னிடம் சமர்பித்து விட்டு பேராண்மை கொண்டு யுத்தம் புரிவாய் என கூறுகின்றார். இதிலிருந்து நாம் தெளிவது என்ன?நாம் உலக வாழ்வில் உழன்று கொண்டிருக்கிறோம். நன்மை தீமைக்கிடையே வேறுபாடடையாது மாயையால் கட்டுண்டிருக்கிறோம். அவற்றை வென்று அஞ்ஞானத்தினின்றும் நீங்கி மெய்ஞானத்தை பெறவேண்டுமாயின் இறைவன் தாள் பனிய வேண்டும். இறைவனுக்கு எம்மை சமப்பம் செய்தல் வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் எமக்கு வரும் இடையூ றுகளை நீக்குவான் இறைவன்.

கண்ணன் கீதையில் கூறுகின்றான் "எவன் ஒருவன் எல்லாவற்றையும் என் பாதாரவிந்தங்களில் சமர்பித்துவிட்டு என்னை வணங்குகின்றானோ! அவனை நான் காப்பேன்". ஆதலினால் மானிடயாய் பிறந்த ஒவ்வொரு மனிதனும் "எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம்" என்ற சிந்தையுடன் செயற்படுதல் அவசியமாகும்.

அடுத்த கீதை கூறும் நல்லுரை யாதெனில் “எப்போது அதர்மத்திற்கு ஆக்கமும், அறத்திற்கு அழிவும் ஏற்படுகின்றதோ அப்போது நான் என்னை விலக்குகின்றேன். தர்மத்தை காக்கவும், அதர்மத்தை அழிக்கவும் யுகந்தோறும் நான் தோன்றுவேன் எனக் கண்ணனின் வாக்காக கூறப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அனைவரும் தமக்கு இடுக்கண் நேருங்கால் எம்மைக்காக்க இறைவன் வருவான் எம் துன்பம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து விடும் எனும் சிந்தையில் வாழத் தலைப்படுகின்றனர். இதனால் மக்களின் உள்ளங்களில் இறைவன் மேல் கொண்ட நம்பிக்கை வேரூன்றி வளர்கின்றது. இறை நம்பிக்கை உள்ள மக்கள் நன்னெறியை அன்றி புன்னெறியில் செல்லமாட்டார்கள். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் நான்கும் அவர்கள் மனதின்கண் இடம் பெறமாட்டாது. இன்றைய சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் எங்கும் எதிலும் சுயநலத்தையும் பொறாமையையுமே காணமுடிகின்றது. காரணம் கீதையின் தத்துவம் மனிதன் மனதில் பதியவில்லை. இந்துக்களின் புனித நூல் கீதை என்று வாய்ச்சொல்லில் மட்டும் நின்று விடும் இன்றைய சமுதாயம் அதை, உள்ளுணர்வில் பதியவைக்கவில்லை. இந்துவாய் பிறந்த ஒவ்வொரு மனிதனும் கீதையின் தத்துவத்தை தெரிந்திருக்க வேண்டும் இதனால் அவனது மானிடப் பிறவி மேன்மை அடையும்.

மற்றும் கீதை கூறுகின்றது மனித உடல் ஒரு வண்டி. அதன் எஜமானன் ஆன்மா. ஐம்பொறி ஐந்து குதிரைகள். அவற்றின் இயல்பு அதன் பாதைகள். மனம் கடிவாளம், ஆன்மா மனம்என்ற கடிவாளத்தை சரியான முறையில் உபயோகித்தால் ஐம்பொறிகள் சீரான வழியில் இயங்கும். தவறின் அவை தம்பாதையில் தவறிவிடும். இதற்காகத்தான் கண்ணன் தேர்ச்சாரதியாய் வந்து பின்வரும் தத்துவத்தை உணர்த்தினான். அர்சுனன் ஆன்மா தேர் உடல் ஐந்து குதிரைகளும் ஐம்பொறிகள் ஆன்மா மாயையால் மதிமயங்கி தன்கடமையை மறந்து விடும் வேளை பரமாத்மா சாரதியாய் வந்து ஆன்மாவுக்கு நல்வழி காட்டுகின்றான் என்பதேயாகும். ஆன்மா பற்றில்லாத இறைவனை சரணடைந்தால் மட்டுமே பரமாத்மா சாரதியாய் வந்து அவனை இயக்கும் என்பது சாரமாகும்.இதையே

“பற்றுக பற்றில்லான் பற்றினை-
பற்றுக பற்று விடற்கு”

என வள்ளுவ பெருந்தகையும் மொழிகின்றார். இதையே

“கீதை சொன்ன கண்ணன் வண்ண தேரில் வருகின்றான்.
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகின்றான்.
பார்த்தனுக்கு பாடம் சொல்ல கீர்த்தன் வருகின்றான்.
காப்பதற்கு கையில் ஏந்து சங்கு சக்கரம்
அவன் கழல்களுக்கு விளக்கம் தானே பிரம்மசூத்திரம்
நான்கு வேதசாஸ்திரம்.....”

எனும் பாடலடிகள் மேலும் தெளிவுப் படுத்துகின்றன. இதிலிருந்து பிரம்மசூத்திரம், நான்கு வேத சாஸ்திரங்கள் கூட கீதையில் தங்கியுள்ளன என்பது தெளிவாகின்றது.

அடுத்து பகவத் கீதை மானிட வாழ்வில் ஏற்படுத்தும் சிறப்பு யாதெனில்

விரதங்கள் பற்றி கூறுகின்றது. விரதம் மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், மெய், வாக்கு, காயம் போன்றவற்றால் இறைவனை வழிபடுத்தலாகும். கீதை கூறும் ஏகாதசி விரதம் சிறப்பானது. நாவை அடக்கினால் எல்லாவற்றையும் அடக்கியதற்கு சமம் என்பார்கள். அறுசுவை உணவை விடுத்து அரிசி சேர்க்காது தானியவகைகளை மட்டும் உப்பு, புளி, உறைப்பை நீக்கி ஏகாதசி அன்று உண்ணல் வேண்டும். நாவை அடக்கும் போது மனம் கட்டுபடும். கட்டுப்பட்ட மனத்துள் இறையொளி சுடர் விட தொடங்கும். அதனால் மானிட வாழ்வு சிறக்கும்.

இவ்வாறாக மானிடனாய் பிறந்த ஒவ்வொரு மனிதனையும் திருத்தி, இறை நம்பிக்கையை ஏற்படுத்தி இறைவனிடம் சரணடையும் மனப்பக்குவத்தை தந்து, எங்கும் எதிலும் இறைவன் என்பதை உணர்த்தி மனமுருகி கூப்பிட்டால் இறைவன் வருவான் அடியார்க்காக எவ்வடிவமும் தாங்குவான் என்பதை தேரோட்டியாய் வந்ததை சான்றாக காட்டி மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைக்கின்றது. பகவத் கீதை இதனாலேயே பிரஸ்தான திரயங்களுள் ஒன்றாக போற்றப்படுகின்றது. உபநிடதங்கள் பசுவாகவும், கீதை அதன் பாலாகவும், அப்பாலை முதலில் சுவைத்த கன்றாகவும் அர்ச்சுணனும் சிறப்பிக்கப்படுகின்றான்.

"கோதையாம் துரெளபதிக்கு சேலை தந்து,
சீலனாம் மனிதனுக்கு கீதை தந்து,
பார்த்தனாம் விஜயனுக்கு நல்பாதை தந்து,
கீதைக்கும் பகவத்கீதையெனும் நாமம் தந்து,
மாயம் செய்தான் மாய வண்ணன்,"

அவன் செப்பிய கீதையை படித்து மானிட வாழ்வில் அதன் மகத்துவத்தை உணர்ந்து எழுமின், விழுமின் கீதையின் போதையை கேள்மின்.

தி. உமாகாயத்திரி
சைவ மங்கையர் கழகம்

*With best Compliments*

*From*

# LUCKY TRADERS

*Dealers in Gunny Bags, Ploy Sack Bags,*
*Copper, Battery, Aluminium Lead, Cast Iron,*
*All Kinds of Size Corks, Tins etc.*

224-A, Wolfendhal Street, Colombo 13.
Tel : 470202, 074-710374, 077-306522

*With best Compliments From*

# MARKEN (PTE) LTD

**Dealers in**
**OFFICE AUTOMATION, STATIONERY**
**White Boards**

279/1 R. A. DE MEL MAWATHA, COLOMBO-13.
T.P.: 301650
E-mail: marken@itmin.com

*With best Compliments From*

# Ambiga *Jewellery*

**COLLECTION OF FINE GENUINE JEWELLERY**

42, Galle Road, Dehiwala, Sri Lanka
Phone : 724756

*With best Compliments From*

# MONISON'S PAIN BALM

*Is Imported From India Just For You*

**The Sure Remedy, Applied Externally Brings Immediate Relief For**

*SWELLINGS, SPRAINS, JOINT PAINS, LUMBAGO, MUSCULAR PAINS, HEADACHE,*

## S.S. IMPORT & EXPORT

A-G-3, Sanchi Arachchi Garden, Colombo 12.
Tel : 449371, 324615, 335203, 078 43549
Fax : 335673 E-mail : ssie@itmin.com

*With best Compliments From*

# *Saraswathy Stores*

**Dealers in Oilmen Goods & Etc.**

*12, Wolfendhal Street, Adamaly Building, Colombo 13.*
*Tel : 432035 T'Grams : "VEESONS"*

*With best Compliments From*

# TREVOR PERERA


Dr. of Motor (USA) A.M.I.R.T.E. (EX) A.M.I.M.I. (UK)
A.M.I.E.T. (UK) Graduate I.B.E. AMIAE (Sri Lanka)
Consultant Automoblie Engineer
Managing Director 'Auto Serv'
Quality for a Diploma For School leavers, Beginners and Those in the Motor Trade
Center for Automomblie Stdies
Yvonne's English Teaching Center
Leran to Speak Fluently in English (Endividual and Small Group Classes) Not More Than Four in a Group
Director

32/3 I, Huludagoda Garden, Mt. Lavinia
Tel : 712055 Cell : 072-670560

*With best Compliments From*

## *Dehiwala Cushion House (Pvt) Ltd.*


*Suppliers of Quality Seat Covers for All Vehicles and Upholsterers of House Hold Furniture*



*144, Galle Road, Dehiwala*
*Phone : 724628-9*
*Fax : 734630*

*With best Compliments From*

# Ravindram and Co.



Sole Agents & Suppliers of
Gold Coin Feed, Cement, Dag Old Broiler & Layer Chicks

No. 28, Main Street, Warakapola.
Tel : 035-67674, 67338

*With best Compliments From*

# SWARNA Jewels

Dealers in 22 ct. Jewellers



177/3, Sea Street, Colombo - 11.
Tel : 421945

*With best Compliments From*

# K. V. SIRDHARAN COMPANY (PVT) LTD.

**IMPORTERS EXPORTERS**

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

**Office :**

**220, Old Moor Street, Colombo 12, Sri Lanka.**

**Tel: 341373, 330133**

**Fax: 0094-1-335307**

*With best Compliments From*



# ORIENT IMPEX (PVT) LIMITED

164, Old Moor Street, Colombo 12, Sri Lanka.

Tel : 01-424079, 326873

Fax : 074-615653

*With best Compliments From*

# WORLD AUTOLINK COMMUNICATION

Ariport & Island Wide Transport Service, Rent-a-car, Van Service, Wedding cars, Travel Consultants & Tours Operators

**I.D.D. Calls, Local Calls, Fax, Connecting Calls, Photo Copying, Laminating, Computer Typing, Freight Forwarding, World Courier Service, Air Tickets**

152/8, Prince Street, Colombo 11, Sri Lanka.
Tel: 472238, 472347, 347970, 421907, 421808
Fax: 0094-1-472347

**Day and Night 24 Hours Hot Line**
**Service Tel : 584298**

*With best Compliments From*

# *Shastha Trades*

*General Merchants & Commission Agents*



**133, 5th Cross Street, Colombo - 11.**
**Phone : 438991**

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளிலே
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# இழப்பதற்கு ஏதுமில்லை

"டேய், எல்லாரும் வெளியில போங்கடா. இன்னும் எத்தனை பேரடா வருவீங்கள்? உங்களுக்கு நான் என்ன கொடுமையடா செய்தேன்? எங்களை போட்டு இப்படி பாடு படுத்திறியளே!" என்றவாறு என் மனைவி கத்தியது காதில் விழுந்து வயிற்றை ஏதோ செய்தது.

அந்த சம்பவத்திற்கு பிறகுதான் இதெல்லாம். முன்னர் போல எனக்கு தைரியமூட்டி நான் மனமுடைந்து போகும் சந்தர்ப்பத்திலெல்லாம் ஊக்கமளித்து வந்த கோகிலா, ஏன் இப்படியானாள். எல்லாம் "அவர்களாற்தானே"

சாதாரண பியோன் என்றாலும், நான் அரசாங்க வேலையிலிருப்பதால் எனக்கு ஊரில் மரியாதைதான். அந்த மரியாதையில்தான் என்னை ஒரு பொருட்டாக மதித்து தன்னோடு பழக அனுமதித்தவர் ராமநாதச் செட்டியார். ஊரிலேயே காணி, வீடு, வளவு, தோட்டம், துரைகளோடு இருந்த பரம்பரை பணக்காரர். ஏதோ கொஞ்சம் படித்து, படிப்புக்குத் தகுந்த மாதிரி பியோன் வேலை பெற்றாலும் அவர்களோடு பார்க்கும் போது நான் பணத்தில் மடுதான். அவர்கள் மலைதான். ஆனால் இந்த மடுதான் அவர்களது செல்வப்புத்திரி குடியிருக்கப் போகும் கோவிலாகப் போகிறது என்று தெரிந்திருந்தால் அவர் என்னை அடுத்துப்பிடித்திருக்கவே மாட்டார்கள்.

"நான் சரியான விசரன்! என் தகுதிக்கு மேல ஆசப்பட்டிருக்கவே கூடாது. ஊரிலேயே எல்லோரையும் விடப் பணக்காரரின் மகள் விரும்பும் அளவுக்கு ஆண்டவன் என்னிடத்தில் ஏது கூடவாகப் படைத்தான்?" என்று நான் வியந்து கொண்டேன், இல்லை வியந்து கொண்டிருக்கிறேன்.

"தன் மனதிற்கு பிடித்தவரைத்தான் மணந்தால் மணருவது, இல்லையேல் தேவையில்லை திருமணம்" என்று ஒற்றைக்காலில் நின்று என்னைத் திருமணம் செய்து கொண்டாள் கோகிலா வீட்டாருடன் பகை கொண்டு. எனக்கும் ஆரம்பத்தில் சரியான ஆச்சரியம் இந்தத் தங்கக்கிளி எவ்வாறு இரும்பு கூட்டுக்குள் சிறைவரச் சம்மதித்தது என!

"பிடித்தாலும் கொம்பைத்தான் பிடித்தான்" என்ற ஊராரின் பேச்சை சட்டை செய்யாது அதே ஊரில் நானும் கோகிலாவும் வாழ்வை தொடங்கினோம். எமது தாம்பத்தியத்திற்கு சான்றாக ஒரு வெண் முத்தை ஈன்றது அவளது திருவுதரம். அதுவும் ஆண் செல்வம். பகை முடித்த அவளது குடும்பம் சிறிது சமாதானமானாலும், கோகிலா தான் மீண்டும் போக மறுத்தே விட்டாள்.

இவ்வாறு காதலித்து திருமணம் செய்து, காதலுடன் வாழ்ந்து வந்திருந்த நாங்கள் அனுபவிக்கும் சந்தோஷம் ஆண்டவனுக்கு பிடிக்கவில்லை போலும்.

காலச்சக்கரம் சுழன்று அந்த ஊர்களின் கோலமே மாறியது. போர் எனும் புயல் பலரைத் தின்று பலரைக் குதறியது. உயிர்களைக் காப்பாற்ற உயிர் பயத்துடன் பிறந்த இடத்தை விட்டு ஓடிப்போனோர்களில் நானும், கோகிலாவும், மகன் சிவாவும் அடக்கமானோம். ஆனால் அது கூடச் சந்தோஷமான அனுபவம் தான்.

நாம் விட்டுவிட்டு ஓடிவந்த பிரதேசங்களில் மீண்டும் அமைதி ஏற்பட்டு விட்டதாகவும் இனி இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் திரும்பலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

மொழியிலும், மதத்திலும், உணர்வுகளிலும் புதிதானவர்களோடு ஷெல்லடித்து உடைந்த வீடுகளின் கூரைகளின் கீழே வாழப் பணிக்கப்பட்டோம். அவர்களோ பாலுக்குக் காவல் வைக்கப்பட்ட பூனைகள் என்பதை எம்மவர் எவருமே அறிய முடியவில்லை.

இடம்பெயர்ந்து திரும்பினாலும் சொந்த மண்ணில் மீண்டும் கருத்தரித்தாள் கோகிலா.

அன்றொரு நாள்

"அப்பா, ஏலாமல் இருக்குதப்பா" கோகிலா.

"என்ன செய்யுது?"

"உங்கட மகன் செய்யிற வேலை தான் இது."

"எப்படிச் சொல்லுவீர் மகனென்று, எனக்கு இனி மகள்தான் பிறக்கும்"

"இல்லை, இனியும் மகன் தான்"

"இல்லை. நான் பெயர் கூட செலக்ட் பண்ணிட்டன். எனக்கு மகள்தான் வித்யா என்று வைக்களாம்."

"இல்லை. மகன்தான் சத்தியன் என்று வைக்கலாம்" என்றவள்

"இல்லையில்லை. மகள்தான் வித்யா என்றே வைக்கலாம்" என்றாள்.

"ஏன் பின்வாங்குகிறீர்?" என்று கேட்ட எனக்கு "இல்லை. உங்கட விருப்பம் தான் என்ட விருப்பம். உங்களுக்கு மகள் வேணுமிண்டா எனக்கும் மகள்தான் வேணும்" என்றாள். ஒரு வித பாசத்தோடு, இப்படி ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத்து வாழ்ந்து வருகையில் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது.

சொந்த மண்ணிலே வீடையும் உடைச்சி, வீட்டுக்குள்ள இருக்குர பொருட்களையும் களவாடி விட்டு, மனைவியின் உடம்பிலும் கை வைத்து விட்டார்கள். அன்றிலிருந்து அவளுக்கு விசர் பிடித்து விட்டது என்று ஊரார் சொல்கிறார்கள். என்னால் முடியாது. கற்பழிக்கப்பட்டதால் திக்பிரமை, வல்லுறவு புரிந்ததால் அதிர்ச்சி, என்றும் ஊர் கதைக்கிறதைப் போல என்ட பாதியுயிரைப்பார்த்து என்னால் சொல்ல முடியாது. என்ட 5 வயது மகன் உயிரோடு மீண்டது தம்பிரான் புண்ணியம் என நினைத்துக் கொள்வேன்.

மெதுவாக மனைவி படுத்திருந்த அறைக்கதவை திறந்து கொண்டு சென்றேன். ஒரு எஜமானனைக் கண்ட நாய் ஒடுங்குவது போன்று, என்னைக்கண்டு கத்தியதை கைவிட்டு அறை மூலையில் தஞ்சமடைந்தாள். அருகில் அமர்ந்து கலைந்து விட்ட அவளது கேசத்தை முடிந்து விட்டு, வாஞ்சையோடு அவள் தலையை தடவினேன். என்ன நினைத்தாளோ தெரியவில்லை. என் மார்பில் முகம் புதைத்து விசும்பி விசும்பி அழுதாள்.

"யார் சொன்னது என் மனைவிக்கு பைத்தியம் என்று?" கத்தத் தோன்றியது. "யாரேனும் எனக்கு முன்னால் இனி என் மனைவியை பற்றி கதைத்தால் என்ன நடக்குமென்றே எனக்குத் தெரியாது" மனதே கூறிக்கொண்டது.

சிறிது நேரம் அமர்ந்திருந்தேன். அவள் சிறிதாக தூக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தாள். பாயை விரித்துவிட்டு அவளை படுக்கச் செய்த நான் மகன் சிவாவை கூட்டிவரப் புறப்பட்டேன்.

அவனோ பால் மணம் மாறாப் பாலகன். தாய்க்கு நடந்ததை அறிந்திருந்தும் அதை உணரத் தெரியாதவன். நாளை தாய்க்கு நடந்ததை ஜீரணிக்க முடியாமல் அவர்களுக்கு எதிராய் இயங்கிய இன்னும் ஒருவரோடு இணையலாம். வீட்டை செல்லடிகளாள் இழந்து உள்ளே இருந்த பொருட்களை இழந்து, ஆதரவாய் இருந்த மனைவியை கிட்டத்தட்ட இழந்த நான் அவனையும் இழக்க சம்மதியேன்.

மொன்ர சொறிக்கு சைக்கிளை மிதித்து மகனை கூப்பிட்டு, சைக்கிளில் ஏற்றி வீடு வந்து இறக்கி, "உடுப்பை மாத்திட்டு முகம் கால் கழுவிட்ட வாடா கண்ணா" என்று கூறி மனைவிக் உணவை எடுத்துக்கொண்டு அவளறைக்குச் சென்றேன்.

கோகிலா ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது நிர்மலமான முகம் கலங்கிக் காணப்பட்டதாயினும் அவளின் அந்த வசீகரம் குறையவில்லை. எப்படிப்பட்ட பெண்ணை எப்படி ஆக்கியிருக்கிறேன். என்னால்தானே எல்லாம். என்னை நானே நொந்து கொள்ளத் தோன்றியது. முகம், கால் கழுவிய மகன் பயத்தோடும், பீதியோடும் விரைவாய் ஓடிவந்து "அவங்கள் வாறாங்கள் அப்பா. அம்மாவை காட்டாதீங்க" யாரையெண்டு இவன் கூறுகிறான் என்று வெளியே வந்து பார்க்க,

ஜீப்பிலிருந்து அவர்கள் இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். வந்தவரிலே முன்னுக்கு வந்தவர், ஏதோ பெரிய இடத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்று அவரின் காக்கிச்சட்டையிலே குத்தியிருந்த நட்சத்திரங்கள் எனக்குக் கூறின.

"இன்னும் எதுக்கு இங்கு வந்திருக்கிறீர்கள்? எண்டு முகத்தில் வினாவுடன் பார்த்தேன். என்னைக்கண்டு பவ்வியமாய் புன்னகைத்து விட்டு,
"அன்று நடந்த சம்பவத்திற்கு நீங்கள் எங்களை மன்னிக்க வேண்டும்."
"ஏன் இன்னும் பண்ணப் போறியளே?"

என்று கேட்ட என்னைப்பார்த்து அவரின் முகத்தில் இறுக்கம் கூடியிருந்தது.

"உங்கள் மனைவியிலும் பிழை இருக்கு. எங்கள் ஆக்களின் கண்படற இடத்திலை நிண்டுகொண்டிருந்தது தப்பு."
"எங்கட பிரதேசத்தில் எங்களுக்கு விருப்பமான இடத்தில் நிக்கவும் உங்களிடத்தில் அனுமதி கேட்க வேண்டுமா?"
"இல்லை. உங்களோடு வாதம் புரிய நாங்கள் வரவில்லை. அன்று நடந்த செயலுக்கு மன்னிப்பு கோரவும், அதற்கு நஷ்டஈடாக எங்கட டிபார்ட்மென்ட் கொடுக்கிற இந்தத் தொகையை தரவும்தான் நாங்கள் வந்தோம். மற்றும் உங்கள் மனைவியை ஒரு நல்ல மனநல நிலையத்தில் சேர்த்து சிகிச்சை பண்ணத்தயாராகவும் இருக்கிறோம்" என்று கூறினார் வந்தவர்.

"ஐயா உங்களின் உதவித்தொகை எனக்கு வேண்டியதில்லை. இவளை எவ்வாறு குணப்படுத்துறது என்றும் எனக்குத் தெரியும். நீங்கள் கொண்டு வந்தத, கையோட கொண்டு போயிடுங்க இதை என் மனைவி காணுவதற்கு முன் இந்த இடத்தை விட்டு நகருங்கள்." என்றேன் கோபமாக.

"செய்யிற உதவியை ஏற்காதது உங்களது விருப்பம். ஆனால் பத்திரிகை, கேஸ், கோட் என்று போட நினைக்காமல் இருந்தால் அதுவே போதும்." சிறிது அதிகாரத்துடன் கண்டிப்பாகக் கூறியவர்கள் சிறிது நேரத்தில் கலைந்து சென்று விட்டார்கள்.

மகன் "அம்மாவை காட்டாதிங்கோ" என்று சொன்னதன் உள்ளர்த்தம் புரிந்தது. அந்தப் பிஞ்சு மனமும் சருகாகி விட்டதோ? "இல்லை. சருகாக விடமாட்டேன். எனக்கு அவள் மட்டுந்தான் மனைவி. சிவாவுக்கும் அவள்தான் தாய். இனியொரு போதும் எதையும் இழக்க எனக்கு முடியாது." என் மனம் கூறிக்கொண்டது மனதில் ஒரு பாரம் கூடியிருந்தது. ஆமாம் இனி என்னிடம் இழக்க ஏதுமேயில்லை.

S. J. நிருபன்
கொழும்பு இந்து கல்லூரி

*With best Compliments From*

# Mylon Traders (Pvt) Ltd.

**IMPORTERS, EXPORTERS**

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

No. 225, Dam Street, Colombo 12.
Tel : 445563, 321422
Fax : 074 -715443

*With best Compliments From*

# TOPSTEEL
**(PVT) LIMITED**



*Importers, General Hardware Merchant*
*and*
*Building Materials*

**DEALERS FOR LANKA TORSTEEL**

454, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Tel : 330099, 434063 Fax : 470360

*With best Compliments From*

# SAI RANJITH ENTERPRISE

**Importers, Exporters,**

**General Merchants & Commission Agents**

17 & 44 A, 4th Cross Street, Colombo - 11.
Phone : 423171, 338427, 348132
Fax : 344876

*With best Compliments From*

# M.T.R. & SONS

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

40, 4th Cross Street, Colombo - 11. Sri Lanka.
Phone : 432819

*With best Compliments From*



# Siva Egg Center

**25, Stanley Tilakarathne Mawatha,**
**Nugegoda.**

*With best Compliments From*



# RAJAH SAAREE CENTER

*Specialist in Indian Sarees, Salwars, Jugra,*
*Blouse Materials and Fancy Items.*

308 C, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel : 503008, 508297.

*With best Compliments From*

# BOMBAY SWEET MAHAL

*for the real taste*

All Kind of Bombay Sweets, Hot Mixtures,
Special Faluda, Fresh Juices,
Cool Drinks and Short Eats.

(Opp. Wellawatte Post Office)
195, Galle Road, Wellawatte.
Tel : 595280

**Orders could be undertaken**

*With best Compliments From*

# TRAVELS JOY (PVT) LTD.

- **TAVREY SIR**
- **GEORGIAN AIRLINES**

No. 111, 1st Floor, Chatham Street, Colombo 01.
Tel : 432192, 433243
Fax : 00-94-43100
E-mail : Cmbtook@SLT.LK

*With best Compliments*
*From*

# Ganesh Textiles
## (Private) Limited



***Wholesale & Retail Dealers in Textiles***


81-83, Main Street, Colombo - 11.
Tel : 325128, 343078

*With best Compliments*

*From*

# V.K. ENTERPRISES (PVT) LTD.

**Importers of High Quality Plywood, MDF Boards, Particle Board, Gypsum Board & Steel Products etc.**



**Head Office:**

407, R. A. De Mel Mawatha, Colombo 03. Sri Lanka.
Tel : 592296, 591724, 591786 Fax : 502175
E-mail : veekay@eureka.lk

**Sales Outlets:**

445, High Level Road, Nawinna, Maharagama.
Phone : 852531
103/8, Mahawatta Road, Colombo 14.
Phone : 432317

*With best Compliments*
*From*




# KUMARAVEL COY.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
DEALERS IN : PROVISIONS

217, Fifth Cross Street, Colombo - 11.
Phone : 421057


*With best Compliments*
*From*

# Modern Chemicals



No. 157, Fourth Cross Street, Colombo 11. Sri Lanka.
Tel : 433069, 332398
Fax : 421337, 334226

*With best Compliments*
*From*



**Wellawatta**

# *Nithyakalyani*

**Jewellery**

*Manufacturers & Exporters of Gems & Jewellery*

**230, Galle Road, Colombo 06, Sri Lanka.**
**Tel : 583392, 585427, Fax : 94-1-585944,**
**E-mail : nithkal@slt.lk**
**Web Site : www.nithyakalyani.com www.nithyakalyani.lk**

*With best Compliments*
*From*


# TECHNO ENTERPRISES

308, Wolfendhal Street,
Colombo 13.

Tel : 330222
Mobil : 071-760605

*With best Compliments*

*From*



# Shangai Steels

**IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS**


384, Old Moor Street, Colombo 12.

Phone : 324867, 433875, 439311

Fax : 439312

*With best Compliments*

*From*



# K. K. S. ASSOCIATES

General Rice Merchants, Commission Agents
&
Dealers in Ceylon Produce

181, Dam Street, Colombo 12.
Tel : 432802

*With best Compliments*

*From*

# Regency Towers

*The Height of Luxury*



*63, Mayura Place, Havelock Town, Wellawatta. Tel : 596962*

AIR CONDITIONING FOR MASTER BED ROOM
IMPORTED FLOORING AND TOILET FITTINGS
HOUSE WITH ONE SPACIOUS BALCONY
TELEPHONE FOR ALL HOUSES
STAND BY GENERATOR SYSTEM
ROOF TOP SATELLITE ANTENNA
AMPLE PARKING FACILITIES
24 HOURS SECURITY SYSTEMS

RPD

RANJANA PROPERTY DEVELOPMENT (PVT) LTD.
307, George R De Silva Mawatha, First Floor, Colombo 13.
Phone : 347447, 347448 Fax : 437646, E-mail : rpd@ureka.lk

RANJANAS ESTD 1946

*With best Compliments*
*From*



# NEW HOTEL MAHESHA

203, Galle Road, Colombo 03.
TEL : 342897, 337187

**BRANCH : ASIRI CAFE**
73, Maha Vidyalaya Mawatha, Colombo 13.
Tel : 343992

நோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய
மாணவர் திறன்காண் போட்டிகளில்
சகல துறைகளிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்றோர்

## நீர். விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

## உங்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

செயற்குழு 1999/2000

# திரும்பிப்பார் 1999/2000

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் தனது வருடாந்த பொதுக்கூட்டத்தை 1999ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி கூட்டியது. அன்றைய தினம் புதிய செயற்குழு தெரிவுசெய்யப்பட்டு பொறுப்பு கையளிக்கப்பட்டது.

அதன்பின் இந்த ஏழு மாத காலப்பகுதியில் நாம் பொறித்த பொற்சுவடுகள் இதோ உங்கள் முன்,

மாதாந்தம் போயா தினங்களில் இந்து சமயப்பெரியார்கள் தலைமையில் மாணவர்களுக்கு போதனைகளும், அறிவுறுத்தல்கலும் வழங்க வழி சமைத்தோம்.

28/06/99 அன்று தனது பாடசாலைகளுக்கிடையிலான சமயத்திறன்காண் போட்டிகளை மிகச்சிறப்பாக நடாத்தி முதல் வெற்றிப்படி கண்டோம்.

☼ 01/07/99 அன்று பாடசாலைக்குள்ளான போட்டிகளை நடாத்தினோம்.

☼ இந்த பருவக்காலத்திலே வன்னியில் போரினில் சிக்குண்டு, உடமையிழந்து, உறவிழந்த அகதிகளின் ஈனநிலையறிந்து எம்மால் இயன்றவரை மாணவர்க்கு வேண்டிய புத்தகங்களையும் உபகரணங்களையும் எம் மாணவரிடம் சேர்த்து வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனோடு அனுப்பிவைத்தோம்.

☼ போரின் கொடூரத்தால் ஈன்றோரை இழந்து அனாதையாக்கப்பட்ட சிறார்கள் திருகோணமலை அன்பில்லத்திலிருந்து கொழும்பு வந்த போது அவர்களும் எம் போன்ற மாணவர்கள், நாளைய சந்ததிகள் என்ற உணர்வில் அவர்கள் சார்பில் கொழும்பு இந்து கல்லூரி மண்டபத்தில் எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொண்டு எம்மால் சேகரிக்கப்பட்ட ஆடைகளை அவர்களிடம் கையளித்தோம்.

☼ எமது வருடாந்த நிகழ்வான கலைமகள் விழாவை சிறப்பாக நடாத்த நிதி திரட்டும் பொருட்டு திரு **V. T.** தமிழ்மாறன் தலைமையில் வழக்காடுமன்றம், தாளலய சிருஷ்டிகர்த்தாக்களின் புதுமை தாளலயம், கானாமிர்தம் ஆகிய அம்சங்களுடன் "தூறல்கள்" என்ற மாபெரும் நிகழ்வை "சக்தி **F.M.**" ஊடக அனுசரணையுடன் செப்டம்பர் 25ம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் சிறப்புற நிகழ்த்தினோம்.

☼ இன்று உங்கள் முன் எம் வெற்றிவிழாவான "**கலைமகள் விழா**"வை தந்து கொண்டிருக்கும் நாம், இன்றுபோல் என்றும் எம் சமய நற்பணியில் தொடர உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாடுகின்றோம்.

செயற்குழு 1999/2000

# நன்றி நவிலல்

✍ பிரதம அதிதியாக பெருமனதுடன் எமதழைப்பை ஏற்று வருகை தந்த அரச கரும மொழிகள் ஆணைக்குழு தலைவர் திரு. சு. சிவதாசன் அவர்களுக்கும், அவர்தம் பாரியார்க்கும்...

✍ கலைவாணிக்கு முத்தமிழால் முடிசூட்ட நிறைந்த மனதுடன் அனுமதியும், வாழ்த்துக்களும் வழங்கிய எம் அதிபர் திரு. H. L. B. கோமஸ் அவர்களிற்கும்...

✍ எம் கல்லூரி உபஅதிபருக்கும், றோயல் கல்லூரி விளையாட்டு மற்றும் மன்றங்களிற்கான பொறுப்பாசிரியர்க்கும், தமிழ் துறை பொறுப்பாசிரியர்க்கும்....

✍ பல சிரமங்களின் மத்தியிலும் எமது ஊக்கம் குன்றாது நாம் செய்த கடமையை கண்ணியமாய் நிறைவேற்றிட வழிநடத்திய மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி. புஷ்பா நீலலோஜனன் அவர்களிற்கும்....

✍ எம் மன்ற வளர்ச்சிக்கு தூண்களாக நின்று, துணை புரிந்த தமிழ் இலக்கிய, நாடக, கர்நாடக இசை மன்ற பொறுப்பாசிரியர்களுக்கும் மற்றும் மாணவ தோழர்களுக்கும்

✍ பாடசாலை மட்டத்திலான, பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களாக பணியாற்றியோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்.

✍ எமது பாடசாலைகளுக்கியிலான போட்டிகளில் கலந்து சிறப்பித்த, வேற்று பாடசாலை மாணவ மாணவிகளுக்கும்.

✍ இம் மலருக்கு இல்லை என இயம்பாது இயன்றவரை விளம்பரத்தை அள்ளித்தந்த விளம்பரதாரர்களுக்கும்.

✍ எமது மன்றத்திற்கு நிதி சேர்க்கும் முகமாக நடாத்தப்பட்ட "தூறல்கள்" பல்சுவை நிகழ்ச்சிக்கு ஊடக அனுசரனை தந்த சக்தி F.M. வானொலி நிலையத்திற்கும், நிகழ்ச்சியை கண்டு களிக்க வந்திருந்த ரசிகப் பெருமக்களுக்கும்.

✍ வேத்தியர் விழா காண களிப்புடன் எமதழைப்பை ஏற்று, வந்திருந்த சகோதர பாடசாலை மாணவ மாணவிகளுக்கும்.

✍ விழாவிற்கு ஒலி, ஒளி மூலம் உயிர் கொடுத்த DASAN SOUND SYSTEMS நிறுவனத்தாருக்கும்.

✍ குறைந்த காலத்தில் எமது விருப்பப்படி மலரை அச்சிட்டுத்தந்த Shri Shakthi Graphic (pvt) Ltd. ஸ்தாபனத்திற்கும்.

✍ இனிக்கும் இன்ப மாலைப்பொழுதிலே எம் கலைநிகழ்ச்சிகளை கண்டு களிக்க வந்த ரசிக பெருமக்களுக்கும்.

✍ எமக்கு பலவிதங்களிலும் அனுசரணையாக இருந்து எம்மை வழிநடத்திய பழைய மாணவர்களுக்கும், மாணவத் தோழரிற்கும்.

✍ குறிப்பிறந்து பல உதவிகள் நல்கிய அனைவருக்கும், குறிப்பிட மறந்த அனைவருக்கும்

**"நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி"**

**செயற்குழு**
**இந்து மாணவர் மன்றம்**

*With Best Compliments*
*from*

**MAHARAJA**

# ROASTED
# RICE FOLUR

இது துப்பரவாக்கப்பட்ட அரிசியை ஊறவிட்டு இடித்து
கையினால் வறுக்கப்பட்டது.
எவ்வித இரசாயனச் சேர்க்கையும் இல்லாதது.
இந்த மாவை நன்றாக கொதித்த நீரில்
தேவையான அளவு உப்புசேர்த்து
இடியப்பம், பிட்டு தயாரிக்கலாம்.

**Made in**
**Sri Lanka**

**MAHARAJA FOOD PRODUCT**

**18/3, DR. E. A. Coory MAwatha, Colombo - 06. Sri Lanka.**
**Tel : 437990, 338116, 591139, 448928 Fax : 591139**

**A QUALITY MAHARAJA FOOD PRODUCTS**

# UKAAYE

**For :-**

**The Unlimited Viewing Choice**

Importers, Installers And Suppliers of:-
Dish Antennas,
Receivers, LNBs,
LNBFs, Feed Horns,
Actuators And
Allied Accessories.,

***GERMAN DESIGNED ACTIVE MULTI ANTENNA***

169, Bodhi Raja Mawatte, Colombo 11.
Tel : 075-370019, Fax : 075-370018